# LAABH SAMACHAR

Volume: 08 | Issue : 10 | **January 2020** | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE


எகிப்து 8 நாட்கள் மார்ச்



ரஷ்யா 7 நாட்கள் ஏப்ரல்



சீனா 7 நாட்கள் மே



சிங்கப்பூர் மலேசியா 6 நாட்கள்




தாய்லாந்து 4 நாட்கள்



வேதவல்லி

கே. கே. நகர், மதுரை.
+91 9787 066 066



To

**பாரதி யாரிதைப் பார்த்திருந்த தாலொரு**
**பாரத காவியம் செய்திருப்பார்**
**பாரதம் தந்த துளசீராமை அந்தப்**
**பாட்டினி லேநிலை செய்திருப்பார்.**

ராஷ்ட்ரபந்து

**திரு. L.K. துளசிராம் B.A., B.L.,**

SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....



# சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி



18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536


அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343
TEXMO
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps
AQUA GROUP
Authorised Dealer:
Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.
AQUATEX
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems
Borewell Submersibles
Single Phase Jet Pumps
Pressure Boosting Systems
Electric Motors
Single Phase Domestic Pumps
Agricultural Monoblocks
Open-well Submersibles
J.M. Karthic Kumar
Cell: 99428 23335
99769 37016
LC LASER CARE
Printer Service
Toner Refill
TONER REFILL
1, Panthadi 1st street, 2nd floor,
(Near Thirumalai Naicker Mahal), Madurai-625 001.
E-mail: printerkarthic@gmail.com
hp
Canon
AQUA DIAMOND RO
Sales & Service
All Company RO Water Purifier Service and exchange available
Thirukonda M. Vishnukumar
9524273727, 9524273728
Office @ Vandiyur, Madurai
email: vishnuaqua2737@gmail.com

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| A.T. Baskar | Member | 94429 37409 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

## நமஸ்கார்...

அனைவருக்கும் குடியரசு தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

வரும் பிப்ரவரி மாதம் மத்திய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் மத்திய பட்ஜெட்-ஐ தாக்கல் செய்ய இருக்கிறார். அவர் தொழில்துறையினர்களுக்கு சாதகமான பலன்களை அறிவிப்பார் என்று நம்புகிறோம்.

மத்திய அரசின் செபி-யின் ஆலோசகர் / பிரதிநிதி திரு. T.S. வித்யாசாகர் அவர்கள் முயற்சியில், சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. T.R. சரவணன் அவர்களின் ஒருங்கிணைப்பில் சேம்பர் ஏற்பாடு செய்த கூட்டத்தில் ஜிம்பாப்வே தொழில் துறையின் இணை அமைச்சர் திரு. ராஜ் மோடி அவர்கள் கலந்து கொண்டார். அவர், மதுரை வர்த்தகர்களை ஜிம்பாப்வே நாட்டில் வர்த்தகம் செய்ய அழைப்பு விடுத்தார். வர்த்தகம் செய்ய ஆர்வமுள்ள நமது சேம்பர் உறுப்பினர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளவும்.

அருளும் பொருளும் இரு துருவங்கள். இவ்விரண்டும் நிறைந்த சமூகம் நம் ஸௌராஷ்ட்ர சமூகம். அருளை போதித்த ஸ்ரீமந் நடன கோபால நாயகி சுவாமிகளும், நம் சமூகத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுத்த ராஷ்ட்ரபந்து L.K. துளசிராம் இவ்விருவரும் நம் சமூகத்தின் இரு பெரும் துருங்களாக கருதுகிறேன். அருளும் பொருளும் உடையவன் நீடூழி வாழ்வான். இவ்விரண்டு மகான்களும் நம் சமூகத்தில் பிறந்து பெருமை சேர்த்துள்ளனர் என்றால் நாம் எவ்வளவு பெரிய பாக்கியவான்கள். இவர்களின் பிறந்த தினம் இந்த ஜனவரி மாதத்திலேயே அனுஷ்டிக்கப்படுகிறது. நமது சேம்பர் அலுவலகத்தில் செயற்குழு உறுப்பினர்கள் ஒன்றுகூடி இம்மகான்களை நினைவுகூறும் வகையில் அவர்களின் புகைப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தியது.

நன்றி

**– குமரன் B ஜகுவா**

## திருக்குறள்

**எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து**
**துன்னியார் துன்னிச் செயின்**

ஸௌராஷ்ட்ர மொழியில்: ஹடவுல்னார் ஹடலன் ஸொட்னு ஜனி லெக்து மீளுன் மிளினு கரனு

**பொருள்:** தக்க இடத்தை ஆராய்ந்து அறிந்து அதைச் சேர்ந்து அந்த இடத்தை விட்டுப் பெயர்ந்து விடாமல் அங்கிருந்தே காரியத்தைச் செய்தால், அக்காரியத்தைக் கெடுக்க எண்ணியவர்களுடைய எண்ணம் பலிக்காது.

அதிகாரம் 50 — இடன் அறிதல் (காரியம் செய்யதற்கு இடத்தை அறிதல்) — அரசியல்

# பொதுச்செயலாளர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

அனைவருக்கும்
குடியரசுதின நல்வாழ்த்துக்கள்

01.01.2020 - Community Business Model என்ற தலைப்பில் புத்தாண்டு நிகழ்ச்சி மதுரை கீதா நடன கோபால நாயகி மந்திரில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக திரு. M.K. கலாதர்பாபு MD., Pandian Printpacks Pvt. Ltd. Mdu. அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. K.R.M. நிரஞ்சன் குமார், Founder, Niranjan Group of Companies, Calicut அவர்களும் கலந்து கொண்டு பேசினர். விழாவில், நந்தினி கலாலயாவின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. சேம்பர் சிறப்பு அழைப்பாளர்கள் திரு. T.R. சரவணன் மற்றும் திரு. T.N. சூரியப்பிரகாஷ் ஆகியோர் இந்த விழாவை ஏற்பாடு செய்தனர். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமை தாங்கினார்.

05.01.2020 - ஸௌராஷ்ட்ர டெக்ஸ்டைல் ஃபிரண்ட்ஸ் அமைப்பின் சிறப்புக்கூட்டத்தில் சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் கலந்து கொண்டு Garments Scenario பற்றி உரையாற்றினார்.

07.01.2020 - மதுரையில் ஶ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகளின் 177வது ஜெயந்தி தினத்தில் நமது சேம்பர் செயற்குழு உறுப்பினர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். அன்றைய தினம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திரு. N.J. குமரேஷ் I.R.S. அவர்கள் ஜி.எஸ்.டி குறித்துதம் பேசினார்.

08.01.2020 - ஈரோடு ஸௌராஷ்ட்ர சபை சார்பில் நடைபெற்ற ஶ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகளின் 177வது ஆராதனை விழா மற்றும் வைகுண்ட ஏகாதசி, தூவாதசி பெருவிழாவில் சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி உரையாற்றினார்.

08.01.2020 - மதுரையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்த மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திருமதி. ஸ்மிருதி ராணி அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தனர்.

11.01.2020 - ஜிம்பாப்வே தொழில் துறை இணை அமைச்சர் திரு. ராஜ் மோடி அவர்களுடன் ஒரு சிறப்பு சந்திப்பு கூட்டத்தை நமது சேம்பர் ஏற்பாடு செய்தது. சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமை தாங்கினார். செபியின் பிரதிநிதி பேராசிரியர். T.S. வித்யாசாகர் & செயற்குழு உறுப்பினர் திரு. T.R. சரவணன் ஆகியோர் இந்த கூட்டத்தை ஒருங்கிணைத்தனர். சேம்பர் உடனடி முன்னாள் தலைவர் திரு. M.K. கலாதர் பாபு, வெளியுறவு செயலாளர் திரு. V.G. ராம்தாஸ் மற்றும் பல நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். நன்றி

- K.K. தினேஷ்

# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்


சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் குடியரசு தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாத இதழில், ராஷ்ட்ரபந்து L.K. துளசிராம் அவர்களின் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. அவர் பிறந்த இந்த மாதத்தில் அவரின் நினைவைக்கூறும் வகையில் அமைந்திட இக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த குடியரசு தினத்துடன் நமது சேம்பர் துவங்கி 13 ஆண்டுகள் நிறைவடைகிறது. நமது லாப் ஸமாச்சார் இதழ் துவங்கி 12 ஆண்டுகள் நிறைவடைகிறது என்பதை அங்கத்தினர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதுநாள் வரையில் லாப் ஸமாச்சார் இதழில் விளம்பரம் அளித்து தொடர்ந்து ஆதரவளித்து வரும் விளம்பரதாரர்களுக்கு இந்த தருணத்தில் மிக்க நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வலைத்தளம் இந்த மாதம் புதுப்பொலிவுடன் துவக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இனி எந்த ஒரு நிகழ்ச்சிகள், லாப் ஸமாச்சார் இதழ்கள் மற்றும் நடவடிக்கைகளையும் **www.sourashtrachamber.com** என்ற வலைத்தளத்தில் காணலாம்.

நமது லாப் ஸமாச்சார் இதழில் வரும் விளம்பரங்கள், இனி இதழில் மட்டுமல்லாமல், சேம்பர் வலைதளத்திலும், மாதாந்திர நிகழ்ச்சி அழைப்பிதழிலும், நிகழ்ச்சியின் வீடியோவிலும் அவரவர் விளம்பரத்திற்கேற்ப இடம் பெறும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



நன்றி

B.S. ஜெனார்த்தனன்

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence,
Business News / Information,
Govt. Notifictions, Amendments,
New Technology etc..
**93441 97952**





*Best Compliments from*

## Shri. Bala V Kutti

Chairman

# BVK GROUP OF COMPANIES

"Kothari Building" 4th floor 114 M G Road, Nungambakkam,
Chennai - 600 034, India. Phone : +91 44 2833 1310 / 0867

Indowind Enegry Ltd | Indus Finance Corporation Ltd | Indeco Ventures limited | Bekae Properties Pvt Ltd

# COMMUNITY BUSINESS MODEL - PHOTO GALLERY





















# COMMUNITY BUSINESS MODEL



புத்தாண்டின் முதல் நாள் முதல் நிகழ்ச்சியாக COMMUNITY BUSINESS MODEL என்ற தலைப்பில் தெப்பக்குளம் ஸ்ரீமந் நடன கோபால நாயகி மந்திர்-ல் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக சேம்பர் உடனடி முன்னாள் தலைவர் திரு. M.K. கலாதர்பாபு MD., Pandian Printpacks Pvt. Ltd. Mdu. அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. K.R.M. நிரஞ்சன் குமார், Founder, Niranjan Group of Companies, Calicut அவர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பரத நாட்டிய நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சி ஏற்பாடுகள் செயற்குழு உறுப்பினர்களான திரு. T.R. சரவணன் மற்றும் திரு. T.N. சூரியப்பிரகாஷ் ஆகியோர் செய்தனர். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்பும், நிறைவுக்கு பின்பும் நந்தினி கலாலயா மாணவர்களின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

இணைச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்களை மேடைக்கு அழைத்தார். இணைச் செயலாளர் திரு. J.S. சாயீ ஜீவன் அவர்களின் இறை வணக்கத்துடன் நிகழ்ச்சி துவங்கியது. சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் நிகழ்ச்சிக்கு பங்கு கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார். பொது செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் இந்த நிகழ்ச்சியின் நோக்கம் குறித்து பேசினார்.

செயற்குழு உறுப்பினர்கள் திரு. T.R. சரவணன் மற்றும் திரு. T.N. சூரியபிரகாஷ் அவர்கள் சிறப்பு விருந்தினர் மற்றும் கௌரவ விருந்தினர்களை அறிமுகம் செய்தனர்.

திரு. M.K. கலாதர் பாபு அவர்கள் பேசுகையில், நம் சமூகத்தின் தொழில் முனைவோர்களை இணைக்கவே இந்த அமைப்பு உருவாகியுள்ளது அதன் முயற்சிகளுக்கு சேம்பர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கது என்று கூறினார். திரு. K.R.M. நிரஞ்சன் குமார் அவர்கள் பேசுகையில், நம் சமூகத்தின் தயாரிப்புகள் நம் சமூக மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். நம் தேவைகளை நம் சமூக தொழில் முனைவோரிடமே முதலில் தேடி பூர்த்தி செய்து கொள்ள முயல வேண்டும் என்று கூறினார்.

சிறப்பு விருந்தினர் மற்றும் கௌரவ விருந்தினர் ஆகியோருக்கு சேம்பர் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கியும் கௌரவித்தது. நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.




வாழ்வில் வளம் பெற!
வர்த்தகத்தில் வெற்றி பெற!!
SCT
24X7 TV CHANNEL IN MADURAI
SOURASHTRA CABLE TV
Sourashtra Cable TV SCT
Get in on Google Play Store
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
94430 34909
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD
179 177 41 64 77

# சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சிறப்பு நிகழ்வுகள்



கடந்த 16.11.2019 அன்று மதுரைக்கு வருகை தந்த தெலங்கானா மாநிலத்தின் புதிதாக கவர்னர் பதிவியேற்ற திருமதி. தமிழிசை சௌந்திரராஜன் அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து சேம்பர் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இந்த சந்திப்பிற்கு உதவிய பா.ஜ.க–வின் மாநில பெண்கள் அணித்தலைவர் திருமதி. A.R. **மகாலஷ்மி** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.



கடந்த 08.01.2020 அன்று மதுரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்திற்கு மத்திய டெக்ஸ்லைல் துறை அமைச்சர் திருமதி. ஸ்மிருதி இராணி அவர்கள் கலந்து கொண்டிருந்தார். கூட்டம் நிறைவு பெற்ற பிறகு, அமைச்சர் அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தனர்.

இந்த சந்திப்பிற்கு உதவிய பா.ஜ.க–வின் மாநில பெண்கள் அணித்தலைவர் திருமதி. A.R. **மகாலஷ்மி** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.




**Memorandum submitted to Hon. RAJ MODI,**
**Dy. Minister of Commerce and Industry,**
**Zimbabwe.**

- Coordination and Cooperation between Sourashtra Chamber of Commerce and Zimbabwe Chamber of Commerce.
- Tie-up between Zimbabwe trade promotion body with Sourashtra Chamber of Commerce.
- Zimbabwe to open a business development and investment office at Sourashtra Chamber of Commerce, Madurai.
- Zimbabwe to promote its Business opportunities through Sourashtra Chamber of Commerce.
- Zimbabwe to invite a business delegation of Sourashtra chamber of Commerce to Zimbabwe Chamber of Commerce.

(Kumaran B Jaghuva)
President

(K.K. Dinesh)
General Secretary

## மதுரை வர்த்தகர்களுக்கு ஜிம்பாப்வே அமைச்சர் அழைப்பு

**மதுரை, ஜன. 12:** மதுரை வர்த்தகர்களை ஜிம்பாப்வே நாட்டில் வர்த்தகம் செய்ய அந்நாட்டு அமைச்சர் ராஜ்மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

மதுரை ஜே.சி. ரெஸிடென்சியில் சௌராஷ்ட்ரா வர்த்தக சங்கம் சார்பில் தொழில் வர்த்தகம் குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஜிம்பாப்வே நாட்டு தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ராஜ்மோடி பங்கேற்று பேசியது:

ஜிம்பாப்வே நாட்டில் அதிகமான இயற்கை வளங்கள், வைரம், பிளாட்டினம் உள்ளிட்ட பல்வேறு கனிமவளங்கள் உள்ளன. மருந்து, வேளாண் பொருள்கள் உற்பத்தி செய்ய ஏதுவானது எங்கள் நாடு. எனவே, மதுரை வர்த்தகர்கள் ஜிம்பாப்வே நாட்டில் முதலீடு செய்து, தொழில் தொடங்க வேண்டும்.

இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதிகம் லாபமடையலாம். ஜிம்பாப்வே நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை இறக்குமதி செய்யலாம். இதற்கான உதவிகளைச் செய்ய அரசு ஆதரவளிக்கும். வர்த்தகர்கள் தொழில் ரீதியாக ஜிம்பாப்வேவுடன் இணைந்து செயல்படும்போது, இரு நாட்டுக்கு இடையே நல்லுறவு அதிகரிக்கும் என்றார்.

சௌராஷ்ட்ரா வர்த்தக சங்கத் தலைவர் குமரன், செயலர் தினேஷ், வெளியுறவுச் செயலர் வி.ஜி. ராமதாஸ், ஒருங்கிணைப்பாளர் வித்யாசாகர், முன்னாள் வர்த்தக சங்கத் தலைவர் எம்.கே. கலாதர் பாபு உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

*– நன்றி: தினமணி*

இந்நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
– திரு. T.R. **சரவணன்,** செயற்குழு உறுப்பினர்

## மத்திய மறைமுக வரிகள் வாரியத்தின் ஆவண அடையாள எண் (DIN)

மத்திய மறைமுகை வரிகள் வாரியத்தின் ஆவண அடையாள எண் DIN - 8 நவம்பர் 2019 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

மறைமுக வரிகள் நிர்வாகத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக கருதப்படும் DIN நடைமுறை, மத்திய நிதி மற்றும் கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களின் வழிகாட்டுதலில் உருவாக்கப்பட்டுள்ளது.

மத்திய மறைமுக வரிகள் வாரியத்தால், இனி அனுப்பப்படும் அனைத்துத் தகவல்களும், ஆவண அடையாள எண் கொண்டதாக இருக்கும். நேரடி வரிகள் நிர்வாகத்தில் இந்த ஆவண அடையாள எண் நடைமுறை ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளது.

மறைமுக வரிகள் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில், மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத்தை பரவலாக பயன்படுத்தி இந்த அடையாள எண் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

புதிய நடைமுறை அமலுக்கு வந்திருப்பதையடுத்து, மறைமுக வரிகள் வாரியத்தால் இனி மேற்கொள்ளப்படும் சோதனைகள், சம்மன், கைது உத்தரவுகள், ஆய்வு நோட்டீஸ் மற்றும் கடிதங்கள் தொடர்பான விசாரணைக்கு ஆவண அடையாள எண் பயன்படுத்தப்பட உள்ளதாக மத்திய வருவாய்த்துறை செயலாளர் டாக்டர் அஜய் பூஷன் பாண்டே தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.டி அல்லது சுங்கத்துறை அல்லது மத்திய கலால் துறையால் அனுப்பப்படும் அனைத்து கடிதப் போக்குவரத்துகளிலும், கணினி மூலம் உருவாக்கப்பட்ட ஆவண அடையாள எண் இல்லாத கடிதங்கள் செல்லாதவையாக கருதப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் புதிய நடைமுறை, முறையான தணிக்கை மேற்கொள்வதற்கான டிஜிட்டல் புள்ளிவிவரப் பட்டியல் ஒன்றை தயாரிக்க உதவும் என்று மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவர் திரு. பிரணாப் கே தாஸ் கூறியுள்ளார்.

*- Press Information bureau*

## எலெக்ட்ரானிக் பேமெண்ட் வியாபாரிகளுக்கு புதிய அபராத விதிமுறை

இந்திய வருமான வரிச் சட்டத்தின் கீழ் 271DB என ஒரு புதிய பிரிவைக் கொண்டு வந்துள்ளது மத்திய அரசு. இந்த சட்டத்தின் படி, வியாபாரிகள் எலெக்ட்ரானிக் பேமெண்ட் வசதிகளை, தங்கள் வாடிக்கையாளர்களுக்குச் செய்து கொடுக்கவில்லை என்றால், நாள் ஒன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்க வழிவகை செய்து இருக்கிறது.

ஆண்டுக்கு 50 கோடி ரூபாய்க்கு மேல், விற்பனை டேர்ன் ஓவர் இருக்கும் வியாபாரிகள், கட்டாயம் எலெக்ட்ரானிக் பணப்பரிமாற்ற வசதிகளை வழங்க வேண்டும். இதற்கு அதிகபட்ச காலக்கெடு வரும் 31 ஜனவரி 2020 வரை உள்ளது. இதை மீறினால், நாள் ஒன்றுக்கு ரூபாய் ஐந்தாயிரம் அபராதம் விதிக்கப்படுகிறது.


வரும் 31 ஜனவரி 2020க்குள், மேலே சொன்ன வியாபாரிகள் (ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் டேர்ன் ஓவர் பார்ப்பவர்கள்) எலெக்ட்ரானிக் பணப் பரிமாற்ற வசதிகளை, தங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கத் தொடங்க வேண்டும். உதாரணத்திற்கு ஒரு வியாபாரி, வரும் 14 பிப்ரவரி 2020 வரை எலெக்ட்ரானிக் பணப் பரிமாற்ற வசதிகளைக் கொடுக்கவில்லை என்பதைக் கண்டு பிடித்தால், ரூ. 5000× 14 நாள் = 70,000/- ரூபாய் அபராதமாகச் செலுத்த வேண்டி இருக்கும்.

இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயம், எலெக்ட்ரானிக் பணப்பரிமாற்ற சேவைகளை வழங்குவதால், கூடுதல் கட்டணங்களை வசூலிக்கக் கூடாது எனவும் சொல்லி இருக்கிறார்கள். இது நாள் வரை எலெக்ட்ரானிக் பணப் பரிமாற்றங்கள் வழியாக, வியாபாரிகள் பணத்தை வசூலிப்பதற்கு வங்கிகள், வியாபாரிகளிடம் கட்டணத்தை வசூலித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இனி எலெக்ட்ரானிக் பணப் பரிமாற்றத்துக்கு, வங்கிகள் வியாபாரிகளிடம் (MDR - Merchant Discount Rate) கட்டணங்களை வசூலிக்கக் கூடாது. அதே போல வியாபாரிகளும் வாடிக்கையாளர்களிடம் இந்த கட்டணத்தை வசூலிக்கக் கூடாது எனச் சொன்ன பின், யார் தான் இந்த செலவை ஏற்றுக்கொள்வார்கள் என கேள்வி எழுந்தது. அதற்கு வங்கிகளும், ஆர்.பி.ஐ-யும் இந்த செலவுத் தொகையை ஏற்கும் எனச் சொல்லி இருக்கிறார்கள்.

பெயருக்கு ஸ்வைப் இயந்திரங்களை வாங்கி வைத்துக் கொண்டு, ரிப்பேர் ஆகிவிட்டது என பொய் சொல்வது அல்லது உண்மையாகவே ரிப்பேர் ஆன இயந்திரங்களை வைத்து அதிகாரிகளை ஏமாற்றுவது எல்லாம், கண்டு பிடித்தால் கூட பிப்ரவரி 1, 2020 முதல் கணக்கிட்டு அபராதம் விதிக்கப்படுமாம். எனவே வியாபாரிகளே உஷாராக இருங்கள்.- *Tamil good returns*


உன்னத தரம் !


உயர்வான ருசி !!



Available in :
15kg Tin, 1 Ltr,
1/2 Ltr, 200ml,
100ml, 50ml

சாரதி®

நல்லெண்ணெய்



Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL

2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in

# ஜனவரி 1-ம் தேதி முதல் அமலுக்கு வந்த வங்கி முறையின் புதிய மாற்றங்கள்



இந்த ஆண்டு, 2020 ஜனவரி 1-ம் தேதி முதல் வங்கி முறையில் பல்வேறு மாற்றங்களும் புதிய விதிமுறைகளும் நடைமுறைக்கு வந்துள்ளன.

**டெபிட் மற்றும் ஏடிஎம் கார்டு:** அனைத்து வங்கிகளும் வாடிக்கையாளர்களுக்கு ஏடிஎம் டெபிட் கார்டுகளை வழங்கியுள்ளன. ஆனால், ரிசர்வ் வங்கியின் உத்தரவின்படி பழைய மேக்னடிக் கார்டுகளை மாற்றி இஎம்வி சிப் பொருத்தப்பட்ட டெபிட் கார்டுகளை வாடிக்கையாளர்களுக்கு வங்கிகள் வழங்கி வருகின்றன. தற்போது வாடிக்கையாளர்கள் மேக்னடிக் டெபிட் கார்டுகளை வைத்திருந்தால், இன்று முதல் அந்த கார்டுகள் செயல்பாடு ரத்து செய்யப்படும். அவ்வாறு பழைய மேக்னடிக் டெபிட் கார்டுகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தாங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கியை அணுகி சிப் பொருத்தப்பட்ட டெபிட் கார்டுகளை எவ்விதக் கட்டணமும் இன்றி பெற்றுக்கொள்ளலாம்.

**NEFT கட்டணம் தள்ளுபடி:** அனைத்து வங்கிகளும் ஜனவரி 1-ம் தேதி முதல் ஆன்லைன் மூலம் NEFT வழியாக வாடிக்கையாளர்கள் பணம் அனுப்பும்போது வசூலிக்கப்படும் கட்டணத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ரிசர்வ் வங்கி உத்தரவிட்டு இருந்தது. இது இன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

**ரூபே, யுபிஐ கட்டணம்:** 2020-ம் ஆண்டு முதல் ரூபே மற்றும் யுபிஐ செயலி மூலம் வர்த்தகர்கள் பணப் பரிமாற்றம் செய்தால், வர்த்தகர்களுக்கு வசூலிக்கப்படும் எம்.டி.ஆர் கட்டணம் வசூலிக்கப்படாது என்று நிதியமைச்சகம் அறிவித்திருந்தது. ஆண்டுக்கு ரூ. 50 கோடிக்கு உள்ளாக விற்று முதல் செய்யும் நிறுவனங்கள் அனைத்தும் வாடிக்கையாளர்களுக்கு ரூபே, யுபிஐ மூலம் பணப் பரிமாற்றம் செய்யும் வசதியை அளிப்பது கட்டாயம் என அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**எஸ்பிஐ வங்கி:** எஸ்பிஐ வங்கி தங்கள் வாடிக்கையாளர்கள் ஏடிஎம்களில் பாதுகாப்பாகப் பணம் எடுக்க வேண்டும் என்பதற்காக விதிமுறைகளைப் பலப்படுத்தியுள்ளது. இதன்படி, இரவு 8 மணிக்கு மேல் எஸ்பிஐ வங்கி வாடிக்கையாளர்கள், எஸ்பிஐ ஏடிஎம்களில் ரூ. 10 ஆயிரத்துக்கு மேல் பணம் எடுத்தால், அவர்களின் செல்போன் எண்ணுக்கு ஓ.டி.பி எண் வரும். அந்த எண்ணை ஏடிஎம் இயந்திரத்தில் பதிவு செய்தால்தான் பணம் எடுக்க முடியும் என்ற வழிமுறையை ஏற்படுத்தியுள்ளது. இது ஜனவரி 1-ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. எஸ்பிஐ வாடிக்கையாளர்கள் வேறு வங்கி ஏடிஎம் களில் பணம் எடுத்தால் இந்த விதிமுறை பொருந்தாது.

**10 ஆயிரம் அபராதம்:** ஆகஸ்ட் 31-ம் தேதிக்குள் வருமான வரி கணக்குத் தாக்கல் செய்ய கடைசி நாளாகும். ஒருவேளை அந்தத் தேதியில் மறந்திருந்தால் நிதியாண்டுக்குள் தாக்கல் செய்யலாம். தாமதமாக ஜனவரி 1-ம் தேதிக்குப் பின் தாக்கலாகும் கணக்குகளுக்கு ரூ. 10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும்.

**ஆதார், பான்கார்டு இணைப்பு:** ஆதார் எண்ணுடன், பான் கார்டு எண்ணை இணைக்கும் காலக்கெடு டிசம்பர் 31-ம் தேதி முடிய இருந்த நிலையில், அதை 2020 மார்ச் 31-ம் தேதி வரை மத்திய நேரடி வரிகள் வாரியம் நீட்டித்துள்ளது. இதை வருமான வரி செலுத்துவோர் பயன்படுத்திக்கொண்டு அடுத்த 3 மாதங்களுக்குள் பான் கார்டையும் ஆதார் எண்ணையும் இணைத்துக்கொள்ளலாம்.

- தி இந்து (த)


சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ்
158, தெற்கு மாசி வீதி, மதுரை - 1.
Ph : 2320536
100 ஆண்டுகள் SRB சில்க்ஸ் Since 1901
ஸ்தாபிதம் 1901
ஆடவர் மற்றும் பெண்களுக்கான பிரத்யேக ஆடையகம்
SRB பொட்டிக் BOUTIQUE
158-A, தெற்கு மாசி வீதி, மதுரை-1. போன் : 4362111
135, 2வது கிழக்கு மெயின் ரோடு, அண்ணாநகர், மதுரை-20 போன் : 4961990
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.

## ஜி.எஸ்.டி கணக்கு தாக்கல் செய்வதில் காலம் தாழ்த்தினால் கடும் நடவடிக்கை

ஜி.எஸ்.டி. கணக்குகள் தாக்கல் செய்வதில் காலம் தாழ்த்தும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய மறைமுக மற்றும் சுங்கவரி வாரியம் (சிபஐசி) ஜி.எஸ்.டி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, இனி உரிய நேரத்தில் ஜி.எஸ்.டி கணக்குகள் தாக்கல் செய்யாமல் இருக்கும் நிறுவனங்களின் வங்கிக் கணக்குகள், சொத்துக்கள் முடக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.டி ரிட்டர்ன் தாக்கல் செய்வதில் பல நிறுவனங்கள் காலம் தாழ்த்தி வருகின்றன. அந்நிறுவனங்களுக்கு பலமுறை எச்சரிக்கை கொடுக்கப்பட்டாலும், அவை வரி கணக்குகளை தாக்கல் செய்வதில் அலட்சியம் காட்டி வருகின்றன.

இந்நிலையில் இத்தகைய நிறுவனங்களின் சொத்துக்களை, வங்கிக் கணக்குகளை முடக்கலாம் என்று மத்திய மறைமுக மற்றும் சுங்கவரி வாரியம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக சி.பி.ஐ.சி, சில வழிமுறைகளை வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஜி.எஸ்.டி ரிட்டர்ன் தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவுக்கு மூன்று நாட்கள் முன்னதாக அந்நிறுவனங்களுக்கு அறிவிப்பு அனுப்பப்படும். அந்தக் காலக்கெடுவுக்குள் தாக்கல் செய்யாத நிறுவனங்களுக்கு, காலக்கெடு முடிந்து 5 நாட்கள் கழித்து மீண்டும் ஒருமுறை தகவல் அனுப்பப்படும்.

அதன்பிறகும் அவை அலட்சியமாக இருக்கும் பட்சத்தில், அந்நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

– நிதி அமிர்தம்

# GST Notification

### No. 49/2019 dtd. 09.10.2019

Rule 36 of CGST Rule, இதன்படி தனது Purchase Register என்பதில் Purchase இருந்தும் Seller அதனை upload செய்யாவிட்டால் Purchaser என்பவருக்கு Input Tax Credit கிடைக்காமல் இருந்தது.

இது தற்போது மாற்றம் செய்யப்பட்டு GSTR 2A என்பதில் வராதவற்றிற்கு ஒரு விதிமுறை வந்துள்ளது.

அதாவது, Purchaser என்பவர் Register-ல் உள்ளவற்றில் Seller GSTR 2A-வில் பதிவு செய்யாதவற்றில் 20% வரை கூடுதலாக ITC கிடைக்கும்.

Eligible Input என்பதில் எந்த மாற்றமும் இல்லை. இது தவிர 30th Sept. / Annual Return வரை ITC கோரலாமென்பதில் எந்த மாற்றமுமில்லை. விட்டுப்போன Credit என்பதை Purchaser சரியாக கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும்.

காம்போசிசன் டீலர்கள் காலாண்டுக்கொருமுறை ரிட்டன் தாக்கல் செய்யும் போது விட்டுப்போனவற்றை கோர மீண்டும் ஒரு காலாண்டு கழித்து தான் Reconciliation செய்ய இயலும். Working Capital என்பது இதனால் பாதிக்கப்பட வாய்ப்புண்டு.

### மற்ற மாநிலத்தில் பதிவு பெறாமை

தமிழ்நாட்டில் GST பதிவு பெற்ற நபர் கேரளாவில் பதிவு பெறாமல் வணிகம் செய்தாலும் அது பதிவு பெற்ற வணிகமாக (Establishment of Distric Persons) GST பார்வையில் கருதப்படும்.(Sec.25(5))

– நிதி அமிர்தம்


GSTIN : 33AADFN8595N1ZK ESTD :1968
NIVARAN SAKTHI
133-A, East Masi Street, 4 Feet Lane, Madurai - 625 001. Ph : 0452 4230330, 8903534438
Website : www.jaiganga.com Email : jaigenga@gmail.com
HIP 34" LENTH 38"
INDIAN BANK A/C No.429080809 IFSC : IDIB000M129
SOUTH MASI STREET, MADURAI- 625 001.
NIVARANSAKTHI - Ph : 8903534438
TN.GOVT.NURSING SERVICE (UNIFORMS)


போலீஸ் ஸ்டேஷனிலிருந்து 2வது கடை
சர்ட் ரூ.230 பேண்ட் ரூ.270
ஒரு ஜோடி ரூ.500 மட்டும்
கார்டு இல்லை என்றால் ரூ.650 ஆகும்
ஆடைக்கு அளவு எடுக்கும் முறை
சர்ட் மட்டும் வேண்டுமானால் இடுப்பு சுற்றளவு மட்டும் போதும் மற்ற அளவுகள் வேண்டாம்
உதாரணம் ஆனந்தம் HIP (இடுப்பு) 35" LENTH (உயரம்) 39"
ATM-பாங்கில் பணம் கட்டிவிட்டு ரசீது நமக்கு வாட்ஸ்அப்பில் அனுப்புங்கள்
A/C No.30223714442 IFSC : SBIN 0002289
SBI, AMMAN SANNATHI, MADURAI -1.
JAIGENGA BRASSIERS Ph : 89035 34438
52 ஆண்டுகளாக சேவை செய்து வளர்ந்து வரும்
ஜெய்கெங்கா
ஆடை தயாரிப்பாளர்கள்
Ph : 0452 - 4230330


முயலின் வெற்றி அதன் காலடியில்;
மனிதனின் வெற்றி அவன் தன்னம்பிக்கையில்



# சாணக்கியரின் தத்துவங்கள்

கி.மு. 350க்கும் கி.மு. 250க்குமு: இடைப்பட்ட காலத்தை சேர்ந்தவர் சாணக்கியர். கௌடில்யர் மற்றும் விஷ்ணுகுப்தர் போன்ற பெயர்களாலும் அறியப்படுபவர். சிறு வயதிலேயே தனது வயதுக்கு அப்பாற்பட்ட அறிவாற்றலுடன் விளங்கினார். இந்தியாவைச் சேர்ந்தவரான இவர் ஆசிரியர், தத்துவவாதி, பொருளாதார நிபுணர், நீதிபதி மற்றும் அரசு ஆலோசகர் போன்ற பன்முக வித்தகர். மௌரியப் பேரரசை நிறுவிய சந்திரகுப்த மவுரியரின் முதன்மை அமைச்சராகவும், வழிகாட்டியாகவும் இருந்தவர். பண்டைய இந்திய அரசியல் இலக்கியமான அர்த்தசாஸ்திரத்தைப் படைத்தவர். இவரது பெயரால் கௌடில்யம் என்றும் இது குறிப்பிடப்படுகிறது. இந்தியாவின் அரசியல் மற்றும் பொருளாதார துறையில் முன்னோடியாகக் கருதப்படுகிறார்.

- மலர்களின் நறுமணம் காற்றின் திசையில் மட்டுமே பரவும். ஆனால், ஒரு மனிதனின் நற்குணம் அனைத்து திசைகளிலும் பரவும்.
- கடவுள் சிலைகளில் இல்லை. உங்கள் உணர்வுகளே உங்களது கடவுகள். ஆன்மாவே உங்கள் கோயில்.
- கல்வியே சிறந்த நண்பன். கற்றவர் எல்லா இடங்களிலும் மதிக்கப்படுகிறார். கல்வியானது அழகு மற்றும் இளமையை வீழ்த்திவிடுகின்றது.
- ஒரு குருடனுக்கு கண்ணாடி எவ்வளவு பயனுள்ளதோ, அது போன்றதே முட்டாளுக்கு புத்தகங்கள்.
- மிகப்பெரிய குரு மந்திரம்: உங்கள் இரகசியங்களை யாருடனும் பகிர்ந்துகொள்ளாதீர்கள். அது உங்களை அழித்துவிடும்.
- ஒரு பாம்பு விஷமில்லாததாக இருக்கலாம்; ஆனால் அது விஷமுள்ளது போல் காட்டிக்கொள்ள வேண்டியது அவசியம்.
- ஒருவர் மிகவும் நேர்மையானவராக இருக்கக்கூடாது. நேரான மரங்களே முதலில் வெட்டப்படுகின்றன. நேர்மையானவரே முதலில் வீழ்த்தபடுகிறார்.
- பயம் உங்களை நெருங்கி வரும்போதே அதை தாக்கி அழித்துவிடுங்கள்.
- ஒரு மனிதன் அவனது செயல்களினாலேயே உயர்ந்தவனாகிறான். பிறப்பால் அல்ல.
- ஒவ்வொரு நட்புக்கு பின்னாலும் கொஞ்சம் சுயநலம் இருக்கின்றது. சுயநலமற்ற நட்பு என்பதே கிடையாது. இது ஒரு கசப்பான உண்மையே.
- ஒரு வேலையை செய்யத்தொடங்கிவிட்டால், தோல்வி குறித்து பயப்படவோ அல்லது அப்பணியை கைவிடவோ கூடாது.
- நேர்மையாக பணியாற்றுபவர்களே மகிழ்ச்சியானவர்கள்.

### உலகின் சிறந்த வெற்றியாளர் கூறிய

## வெற்றிக்கான சில முக்கிய விதிகள்

- உங்கள் பார்வையை விசாலமாக திறந்து வையுங்கள்.
- பயப்படாதீர்கள், வலுவாக இருங்கள்.
- கனவு காணுங்கள்.
- மன உறுதியுடைய குழுக்களை உருவாக்குங்கள்.
- ரிஸ்க் எடுப்பதிலிருந்து மிகச் சிறந்த பாடங்களை கற்றுக்கொடுக்கும்.
- வெற்றியின் மீது எப்போதும் ஆவல் கொண்டிருங்கள்.
- உங்கள் உறுதியான உள்ளுணர்வுகளை நம்புங்கள்.
- உங்களை பற்றி நீங்கள் செய்த காரியங்கள்தான் பேசும்.
- எல்லோரையும் நம்புங்கள், ஆனால் யாரையும் சார்ந்திருக்காதீர்கள்.

**Mukesh Dhirubhai Ambani,**
Chairman, MD., Reliance Industries Ltd.




தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...

ரிஜென்சி டிரேடிங் கம்பெனி

5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை-625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051



O.V.K. பாஸ்கரன்

அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்

V.K. ஜெயசங்கர்



ஒருவனை மனிதனாக ஆக்குபவை உதவிகளும், வசதிகளும் அல்ல அவனுக்கு ஏற்படும் இடையூறுகளும் துன்பங்களும் ஆகும்

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrance Pvt. Ltd.



K K Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

# ராஷ்ட்ரபந்து ஸ்ரீ L.K. துளசிராம் அவர்களின் நினைவுக் கட்டுரை

ஒன்னா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்னாது நிற்பதொன்று இல்

என்பது வள்ளுவர் வாக்கு. இணையில்லா ஓங்கிய புகழைத் தவிர உலகத்தில் அழியாமல் நிலைத்து நிற்பது வேறொன்றும் இல்லை என்கிறார் தெய்வப்புலவர் வள்ளுவர். அது போல தனது செயலால் நிலையான புகழோடு நிலை பெற்றவர் ராஷ்ட்ரபந்து ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்கள்.



ராஷ்ட்ரபந்து. திரு. L.K.துளசிராம் B.A.B.L.

1870-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் தேதியன்று தொழில் விற்பன்னரான லகுடுவா குப்பய்யர் - மீனாட்சியம்மாள் தம்பதிக்கு மூன்றாவது மகனாக மதுரையில் பிறந்தவர். கல்வி கேள்களில் சிறந்து விளங்கிய இவர் ஆரம்பப் பள்ளியில் படித்தபின், மதுரை பிஷர் உயர் நிலைப்பள்ளியில் சேர்ந்தார். அங்கு 1885-ம் ஆண்டில் பள்ளியிறுதி வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்று, முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
அனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்,
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல் - மகாகவி பாரதியார்.

என்று உணர்ந்த அவர் உயர்நிலைப்பள்ளியில் படித்த காலத்திலேயே, விடுமுறை நாட்களில் தம் நண்பர்களை அழைத்துச் சென்று, ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி போதித்து வந்தார். மாணவர்களுக்கு இவர் போதித்த முறை கந்தாடை சுந்தரராஜ பாகவதரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதனால், அவரது சேவையைப் பயன்படுத்தி ஏழைக் குழந்தைகளுக்கு கல்வி கற்றுக் கொடுக்க கல்விக் குழு ஒன்றை அவர் அமைத்தார். அந்தக் குழுவினர் மதுரையில் இராமநாதபுரம் சாலையிலிருந்த தொப்பே பெல்லய்யர் சத்திரத்தில் (இது தற்போது காமராஜர் சாலையில் அலங்கார் தியேட்டர் எதிரே உள்ளது) 1886-ம் ஆண்டு ஓர் ஆரம்பப் பள்ளியை நிறுவினார்கள். இந்தப் பள்ளி குழு ஆரம்பப்பள்ளி (Committee Primary School) என்றும் சத்திரப்பள்ளி என்றும் அழைக்கப்பட்டது. இந்தப்பள்ளியின் ஆரம்ப காலத்தில் அதன் ஆசிரியராகப் பணியாற்றி, ஏழைக் குழந்தைகளுக்கு எழுத்தறிவித்த பெருமைக்கு உரியவரானார் துளசிராம்.

சத்திரப்பள்ளியில் மாணவர்களுக்கு ஓராண்டுக் காலம் கல்வி போதித்த துளசிராம், 1887ம் ஆண்டு மதுரைக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு இரண்டு ஆண்டுகள் பயின்று எப்.ஏ. என்று சொல்லப்பட்ட இடைநிலைக் கலை இறுதித்தேர்வில் வெற்றி பெற்றார். அதன்பின் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து பி.ஏ. பட்டப்படிப்பு படிக்க விரும்பினார்.

அவருடைய ஆரம்பப்பள்ளி ஆசிரியர் ரெவரண்ட் ரெண்டால் ஒரு பரிந்துரைக் கடிதம் கொடுத்ததின் பலனாக கூப்பரின் முயற்சியால் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் துளசிராம் பி.ஏ. பட்டப்படிப்பு வகுப்பில் சேர்ந்து படித்தார். பட்டப்படிப்பை முடித்த துளசிராம் அரசுப் பணியான பதிவுத்துறை மற்றும் வருவாய்த் துறையில் இராமநாதபுரம், சாத்தூர் மற்றும் அருப்புக்கோட்டை போன்ற இடங்களில் துணைப்பதிவாளராகப் பணியாற்றிய இவர் பிறந்த சமூகத்திற்கு தொண்டு செய்ய தனது அரசுப் பணி தடையாக இருப்பதாக எண்ணி 1898ல் துணைப்பதிவாளர் பதவியிலிருந்து விலகினார்.

பதவியைத் துறந்து மதுரைக்குத் திரும்பிய துளசிராம், தமது நண்பர்களான ஒண்டிவில்லு கிருஷ்ணசாமி அய்யர், தொப்பே சேஷய்யர், மாணிக்கா சங்கர நாராயணய்யர், கொண்டா ரெங்கசாமி பாகவதர், ஒண்டிவில்லு ராமய்யர், சின்னக்கொண்டா வெங்கடாசலபதி அய்யர் ஆகியோரின் துணை கொண்டு 1895ம் ஆண்டு பிப்ரவரி 12ம் தேதி சௌராஷ்ட்ர சபை என்னும் பெயரில் சமூக ஸ்தாபனத்தைத் திருத்தி அமைத்தார். அதன்பின் சமூக முன்னேற்றம் தொடர்பான செயல்கள் படிப்படியாக நல்ல முறையில் நடைபெற்றன. சௌராஷ்ட்ர சபையைச் சேர்ந்த ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசுவரர் ஆலயப் பிரம்மோற்சவங்கள் பங்குனி உத்திரத்தின் போது வைகையாற்றில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டன.

சமுதாய, பொருளாதாரத் துறைகளில் நீதியை நிலைநாட்ட சட்ட ஞானம் அவசியம் என்பதை உணர்ந்த துளசிராம், 1898-ல் சட்டக்கல்லூரியில் சேர்ந்து 1901-ல் சட்டப்படிப்பில் தேறி பி.எல். பட்டம் பெற்றார். அதன்பின் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டு, பணியைத் தொடங்கினார். வெண்ணிறத் தலைப்பாகை, நெற்றியில் பளிச்சென மின்னிடும் வைணவச்சின்னம், கண்களில் கண்ணாடி, அந்த கண்ணாடியிலிருந்து பார்த்த பார்வையில் கனிவு, உதட்டிலே

புன்னகை, கழுத்திலே அங்கவஸ்திரம் ஆகிய இவை எல்.கே. துளசிராமின் வழக்கறிஞர் தோற்றத்திற்குப் பொலிவூட்டின.
தமது கட்சிக்காரர்கள் தரப்பில் கருத்துக்களை எளிமையாகவும் நல்ல முறையிலும் எடுத்துச் சொல்லும் ஆற்றல் வாய்ந்தவராகவும், சட்ட நுணுக்க வாதங்களை இனிய தமிழில் வாதாடும் திறமைப்பெற்றவர். இவர் மீது ஆங்கிலேய நீதிபதிகள் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். இவர் வாதாடும் வழக்குகளில் குற்றவாளிகள் தண்டனை பெறாமல் தப்ப முடியாது. நிரபராதி தண்டனைக்கு ஆளாக மாட்டார்.

1919-ல் இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதிநிதிகளை ஒரு தேநீர் விருந்துக்கு அழைத்து இருந்தனர். அவ்விருந்தில் எல்.கே. துளசிராமும் கலந்து கொண்டார். இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர்தர் ஹெண்டர்சன், சைடன்ஹாம்ஸ் ஆகியோரும் கலந்த கொண்டனர். அவர்கள் அளவளாவிக் கொண்டு இருந்த நேரத்தில் அந்த அறையில் தலை சிறந்த நிர்வாகி எனப் பெயர் பெற்றவரும், இந்தியாவின் பழைய அரசுப் பிரதிநிதியுமான, கர்சன் பிரபு நுழைந்தார். அவர் நுழைந்ததைப் பார்த்த உடன் அனைவரும் மரியாதை நிமித்தமாக எழுந்து நின்றனர். எல்.கே. துளசிராமும் எழுந்து நின்றார். ஆனால் கர்சன் பிரபு துளசிராமின் அருகில் வந்து, துளசிராம் ஒரு மிகப் பெரிய அறிவாளி என்பதை, அவர் நாடாளு மன்றக் குழுவின் முன் அளித்த அளித்த சாட்சியத்தில் இருந்து, தான் புரிந்து கொண்டதாகக் கூறினார். அத்தகைய பேரறிஞர் தனக்காக எழுந்து நிற்கக் கூடாது என்று கூறி, அவரது தோளை அழுத்தி அமர வைத்தார்.

சாயத் தொழில், நெசவுத் தொழில் வளம் பெற வேண்டும், பொதுக்கல்வியோடு தொழிற் கல்வியும் அவசியம் என்று எண்ணி பல வகைகளில் முயற்சி செய்ததின் பயனாக அரசு தொழிற்கல்வி கூடம் ஒன்றை நிறுவியது. கூட்டுயர்வே நாட்டுயர்வு என்று எண்ணத்தில் நம் சமூக மக்களுக்காக கூட்டுறவு வங்கியைத் தொடங்கினார்.

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவருக்கு
மாடல்ல மற்றவை யவை

அதவாது இந்த உலகில் அழிவில்லாத சிறந்த செல்வம் என்பது கல்விச் செல்வமே; என்பது பொய்யில் புலவர் வள்ளுவரின் வாக்கு. சமூக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்றால் கல்வி அறிவே பிரதானமானது என்று எண்ணிய இவர் சௌராஷ்ட்ர மேல்நிலைப்பள்ளியை அரும்பாடுபட்டு துவக்கி வைத்தார்.

மகாகவி பாரதியின் கவிதை நூல்கள் ராஜத்துவேஷமானவை என்று கூறி, ஆங்கில ஆட்சி தடைசெய்தது. சென்னை பிரதம மாகாண மாகாண மாஜிஸ் டிரேட் உத்தரவின்படி 1928-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் தேதியன்று அந்த நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், சென்னை மாகாணத்தில் நடைபெற்ற சட்டமன்றத்தில் தீரர் எஸ். சத்தியமூர்த்தி இதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார். இத் தீர்மானத்தின் மீது பேசிய அவர், ஆயிரக்கணக்கான மக்கள் பாரதியின் பாடல்களை மனப்பாடம் செய்திருக்கிறார்களே, அவர்களை இந்த அரசாங்கம் என்ன செய்ய முடியும்? என்று வீராவேசமாகக் கேட்டார். அப்போது உறுப்பினர் லகுடுவா எல்.கே. துளசிராம் திடீரென்று எழுந்து, பாரதியாரின் பாடல்களைப் பண்ணோடு இசைத்துப் போர்ப் பரணி பாடினார். இதனை அறிந்த ஒரு கவிஞர் எழுதியதே இக்கவிதை

பாரதி யாரிதைப் பார்த்திருந்த தாலொரு
பாரத காவியம் செய்திருப்பார்
பாரதம் தந்த துளசீராமை அந்தப்
பாட்டினி லேநிலை செய்திருப்பார்.


இவ்வாறு ஒரு காவியமே இயற்றியிருப்பாராம் பாரதியார். உலகில் நிலைத்திருக்கும் வகையில் துளசிராமின் புகழைப் பாடிக்கொண்டிருக்குமாம்.

உழவன் நெல்லுக்குப் பாய்ச்சும் நீர் அங்கிருக்கும் புல்லுக்கும் பயனைத் தரும். அது போலவே இந்தப் பழமையான உலகில் நல்லவர் ஒருவர்க்காகப் பெய்யும் மழை (பலன்கள்) எல்லாருக்குமே பயனைத் தரும் என்பது

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

ராஷ்ட்ரபந்து ஸ்ரீ மான் எல்.கே. துளசிராம் அவர்கள் செய்த நற்காரியங்களால் இன்றளவும் நம் சமூகம் மட்டுமின்ற இந்த நாடே பயனடைந்து வருகிறது என்றால் மிகையாகாது. அவரால் தொடங்கப்பட்டு பராமரிக்கப்பட்ட அனைத்து அமைப்புகளும் சிறப்பாக நடைபெற அவர் ஆசி வழங்குவார் என்ற நம்பிக்கையில்...

தொகுப்பு - B.S. ஜனார்த்தனன்



ராஷ்ட்ரபந்து L.K. துளசிராம் அவர்களின் நினைவு மற்றும் ஜெயந்தி தினங்களில், அன்னாரை நினைவுக்கூறும் வகையில் நமது சேம்பர் அலுவலகத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

*Feeling Good Is Second Nature*

Lissy®

- Bra
- Panty
- Slips

*All Women Love*

Feeling Second Nature

*Manufacturer:*

**VGP APPARELS**

Saikrupa Industrial Estate (Dinbandu)
Shop No: 10, Near Shivam Wafers, Opp. P.L. Lokhande Marg,
Chembur(W), Mumbai - 400 089
Ph: 022 - 2525234, Cell: 89760 10072

**ஜெய்கங்கா அப்பேரல்ஸ்**
279, கீழ மாசி வீதி
விளக்குத்தூண் அருகில்
மதுரை – 1
செல்: 94430 21910

**P.G. India**
50, தெற்கு மாசி வீதி
லலிதா ஜுவல்லரில் எதிரில்
மதுரை – 1
செல்: 84382 71065

**வெங்கடேஸ்வரா டெக்ஸ் & கிட்ஸ் வியர்**
32, மஹால் 5வது தெரு
மதுரை – 1
செல்: 99650 40168

# Documents Required for Udyog Aadhar Registration

| | |
|---|---|
| Aadhaar Number | Twelve digit Aadhaar number which is issued to the applicant.<br>This Aadhaar number in case of Proprietary Enterprise must be of the Managing partner, of Authorised Partner for Partnership Enterprise and of Authorised Person for Other forms of Enterprises |
| Name of Owner/Promoter | The name of applicant as provided in the Aadhaar Card (https://cleartax.in/s/aadhaar-card) |
| Category | General / Scheduled Tribe (ST)/ Scheduled Caste (SC) / Other Backward Castes (OBC) |
| Business Name | Name of the of Entity under which it is conducting its business. One applicant could have more than one enterprises and each one could be registered individually with the same Aadhaar Number for a separate Udyog Aadhaar |
| Type of Organization | Type of Business entity or Legal Entity. (Proprietorship, Partnership Firm, Hindu Undivided Family (https://cleartax.in/s/huf-hindu-undivided-family), Private Limited Company, Co-Operative, Public Limited Company, Self Help Group, LLP, Others) |
| Address | Postal Address of the business for communication purposes including contact numbers and email address |
| Date of Commencement | The commencement date of the respective businesses |
| Previous Registration Details (if any) | Details of any previous MSME registration |
| Bank Details | Banking details of the of the company which includes Bank Account number and IFSC Code (https://cleartax.in/ifsc-code/) |
| Key Activity | Key areas of activity of the business –service or manufacturing |
| National Industrial Classification (NIC) Code | The NIC Code must be entered from the National Industrial Classification handbook. The Applicant might select multiple National Industrial Classification-2008 (NIC) Codes for including all of its activities. |
| Number of persons employed | The number of employees in the business |
| Investment in Plant & Machinery / Equipment | Total amount investment in terms of machinery and equipment by the business |
| District Industry Center (DIC) | The details of the DIC (District Industry Center) nearest to such business, if needed |




# சில்லறை கடனுக்கான மவுசு கூடுகிறது

சொகுசு வாழ்க்கையை விரும்பும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இன்றைய தொழில்நுட்ப புரட்சி காலகட்டத்தில் அனைத்து வகையான பொருள்களுக்கான தேவையும் மின்னல் வேகத்தில் அதிகரித்து வருகிறது. அவற்றை கடன்பெற்றாவது தனதாக்கிக் கொள்ளும் மனோ நிலைக்கு மக்கள் மாறிவருகின்றனர்.



அதன் அறிகுறியாகவே சில்லறை கடன் வளர்ச்சி அடுத்த 5 ஆண்டுகளுக்குள் ரூ. 96 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன. வரும் ஆண்டுகளில் சில்லறை கடன் வளர்ச்சியில் சிறிய நகரங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், நகர்ப்புற விரிவாக்கத்தால் வீடு, கார், நுகர்வோர் பொருள்களின் விற்பனையின் வேகம் அங்குதான் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே உள்ளது.

சில்லறை கடன் வளர்ச்சியில் ஆதிக்கம் செலுத்தவும், அதற்கான வாய்ப்புகளை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் உள்ளிட்டவை தற்போது முதலே ஆயத்த பணிகளை தொடங்கிவிட்டன. வரும் 2022ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீடு கிடைப்பதை உறுதிப்படுத்தும் "பிரதம மந்திரி அவாஸ் யோஜனா" திட்டத்தை செயல்படுத்துவதை மத்திய அரசு தீவிரமாக கையிலெடுத்துள்ளது.

அதன் காரணமாக, சாதாரண மற்றும் குறைந்த விலை வீடு மற்றும் சொத்துக்களுக்கான தேவை சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. வரும் 2024ம் ஆண்டுக்குள் இப்பிரிவில் வழங்கப்படும் கடன் ரூ. 45 லட்சம் கோடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மின் மற்றும் மின்னணுப் பொருள்களில் நுகர்வோரின் நாட்டம் அதிகரித்து வருவதையடுத்து, அவர்கள் பெறும் தனிநபர் மற்றும் கிரெடிட் கார்டு ஆகியவற்றுக்கான கடனும் அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் ரூ. 14 லட்சம் கோடியை எட்டவுள்ளது.

மேலும், வர்த்தக வாகனம், நான்கு சக்கர மற்றும் இரு சக்கர வாகனம் கடனும் ரூ. 17.5 லட்சம் கோடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொருள்களின் விற்பனை வளர்ச்சி விறுவிறுப்பு கட்டத்தை எட்டும் நிலையில், சிறு, குறு நடுத்தர நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன் ரூ. 13.2 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என்கிறது ஐசிஐசிஐ வங்கி -கிரிசில் ஆய்வு.

சில்லறைக் கடன் வர்த்தக பெருக்கத்தை கணக்கில் கொண்டு இப்பிரிவில் மேலும் பல நிறுவனங்கள் களமிறங்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது. போட்டி அதிகமாவதால் நுகர்வோருக்கு குறைந்த வட்டியில் கடன் கிடைக்கும் சூழல் உருவாகும்.

மேலும், டிஜிட்டல் முறையில் கடன் வழங்கும் நடவடிக்கையை நிறுவனங்கள் விரைவுபடுத்தும் என்பதால், அவற்றுக்கு குறைந்த செயல்பாட்டு செலவினம் ஏற்படும் என்பதுடன் லாப விகிதமும் அதிகரிக்கும்.

எனவே, நுகர்வோர் தேவையான கடன்களை தங்களுக்கு ஏற்ற நிறுவனத்தில் குறைந்த வட்டியில் தேர்ந்தெடுப்பதில் விழிப்புணர்வுடன் செயல்பட்டால் மட்டுமே அது சுமையாக மாறாமல் சுகமானதாக இருக்கும்.

- தினமணி


K.G.சீனிவாசன் 9150408082, 9150408081
பள்கார் ஆக்டிங் டிரைவர்ஸ் & டிராவல்ஸ் ஏஜென்ட்

Drivers Rental Cars
Tourister 407 Vans
Real Estates
for video
QR CODE
www.palkaractingdrivers.com

T.K.B.ராஜ்குமார்
YP GROUP
9150408081
9150408082

பள்கார்
ப்ராபர்டீஸ் & ரியல் எஸ்டேட் ஏஜென்ஸி
ரியல் எஸ்டேட், டிராவல்ஸ், டிரைவர் சர்வீஸ்
for Banking... G Pay Paytm
for Internet... Google facebook YouTube

# லாபத்தை உறுதி செய்யும் மல்டிகேப் முதலீடு

மியூச்சுவல் ஃபண்டில் முதலீடு செய்பவர்களிடையே பெருமளவிலான வரவேற்பை மல்டி கேப் ஃபண்டுகள் பெற்றுவருகின்றன.

இந்த மல்டி கேப் ஃபண்டுகள் பங்குச் சந்தையில் ரூ. 1.41 லட்சம் கோடி அளவிலான முதலீட்டைக் கொண்டுள்ளன. இந்த மல்டி கேப் ஃபண்டுகள் லார்ஜ், மிட் மற்றும் ஸ்மால் கேப் பங்குகளில் கலவையாக முதலீடு செய்யப்பட்டு வருகின்றன. இப்படி கலவையாக முதலீடு செய்யும் வாய்ப்புகள் இதில் அதிகமிருப்பதால் ஃபண்டு மேனேஜர்களுக்கு இவற்றில் செய்யப்படும் முதலீடுகளைக் கையாள்வதில் முழு சுதந்திரம் கிடைக்கிறது. இதனால் ஃபண்ட் மேனேஜர்களால் இந்த ஃபண்டுகளில் உள்ள சந்தை அபாயங்களைச் சரிசெய்து நல்ல வருமானத்தை ஈட்ட முடிகிறது.

இந்த மல்டிகேப் ஃபண்டுகளின் சிறப்பே, எல்லா சூழ்நிலைகளிலும் சந்தை அபாயங்களைக் கட்டுப்படுத்தி லாபத்தை உறுதி செய்வதாகும். இவை பல்வேறு விதமான பங்குகளில் பிரித்து முதலீடு செய்யப்படுவதால் எல்லா வகையான முதலீட்டாளர்களுக்கும் ஏற்ற ஃபண்டாக இது விளங்குகிறது. இதனால் மியூச்சுவல் ஃபண்டு, பங்குச் சந்தை போன்றவற்றில் புதிதாக நுழைபவரும், அனுபவம் உள்ளவரும் என அனைவரும் இதில் தயங்காமல் முதலீடு மேற்கொண்டு லாபம் பார்க்கலாம்.

இவற்றில் உடனடி மற்றும் நீண்டகால முதலீடுகளும் செய்யலாம். மல்டிகேப் ஃபண்டுகள் எந்தவிதமான பங்குகளிலும், எந்தவிதமான துறைகளிலும் முதலீடு செய்யலாம். இந்த ஃபண்டின் கட்டமைப்பில் எந்தவித சார்புத்தன்மையும் இல்லை. ஒரே நிபந்தனை இந்த ஃபண்டின் முதலீட்டு தொகையில் குறைந்தபட்சம் 65 சதவீதத்தை பங்குகளில் முதலீடு செய்ய வேண்டும்.

இந்த முதலீட்டு திட்டம் எளிமையாக இருப்பதால் முதலீட்டாளர்களுக்கு முடிவுகளை எடுப்பதில் உதவியாக இருக்கிறது. மேலும், ஃபண்டு மேனேஜர்களாலும் முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்பைச் சரியாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

திறமையாக கையாண்டால் மல்டிகேப் ஃபண்டுகள் சந்தை சுழற்சிகளுக்கு ஏற்ப நிலையான வருமானத்தைத் தரக்கூடியதாக விளங்கும். மல்டிகேப் ஃபண்டுகள் பெரும்பாலும் டைவர்சிஃபைடு பங்குகளைக் கொண்டதாகவே இருக்கும். இதனால் இந்தத் திட்டத்தில் முதலீட்டாளர்கள் அதிருப்தி கொள்வதற்கான வாய்ப்புகளே இருக்காது. மேலும் இது முழுக்க முழுக்க இலகுவான திட்டம் என்பதால் முதலீட்டாளர்களுக்கு எந்தப்பங்கை தேர்ந்தெடுப்பது என்ற குழப்பமோ, எந்தப் பங்கு சரியானது என்ற குழுப்பமோ வராது.

சந்தை அபாயங்கள் மற்றும் ஏற்ற இறக்கங்களை எந்த அளவுக்கு சமநிலை செய்திருக்கிறது என்பதைப் பொருத்து ஒரு சிறந்த மல்டிகேப் ஃபண்டை அடையாளம் காணலாம்.

கடந்த 10 ஆண்டுகளில் மல்டிகேப் ஃபண்டுகள் சராசரியாக 11.6 சதவீத வருமானத்தைக் கொடுத்துள்ளன. இவற்றில் முன்னணி ஃபண்டுகள் 16-17 சதவீத அளவில் வருமானம் கொடுத்திருக்கின்றன. மல்டிகேப் ஃபண்டுகளில் 85 லட்சம் கணக்குகளை முதலீட்டாளர்கள் வைத்துள்ளனர். இந்த வகை ஃபண்டுகளுக்கான நம்பகத்தன்மைக்கு இதுவே ஆதாரம்.

ஸ்மால்கேப், மிட்கேப் மற்றும் லார்ஜ்கேப் பங்குகளை ஒன்றாக ஒரே போர்ட்ஃபோலியோவில் கொண்டிருப்பதன் மூலம் மல்டிகேப் ஃபண்டுகள் சிறந்த முதலீட்டு திட்டமாக உள்ளது. அதேசமயம், நிலையான வருமானத்தைத் தருவதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு முதலீடு மேற்கொள்வதில் பரிபூரண அனுபவத்தைத் தருகிறது. சந்தை நன்றாக ஏற்றம் காணும்போது மல்டிகேப் ஃபண்டுகளில் உள்ள மிட்கேப், ஸ்மால்கேப் பங்குகள் நன்றாக ஏற்றம் அடையும். இதன் மூலம் முதலீட்டாளர்கள் லார்ஜ் கேப் பங்குகள் இறக்கம் கண்டாலும், மிட்கேப், ஸ்மால்கேப் பங்குகளில் தங்களின் முதலீட்டை மேற்கொள்ள முடியும். பெரும்பாலும் சந்தை நகர்வுகளுக்கு மாறாக, இந்த ஃபண்டுகள் முதலீட்டாளர்களுக்கு நிலையான வருமானத்தைத் தரும் வகையில் கையாளப்படுகின்றன.

எனவே, மிதமான ரிஸ்க் எடுக்க தயாராக உள்ள முதலீட்டாளர்களுக்கு மிகவும் பொருத்தமான முதலீட்டு திட்டமாக மல்டிகேப் ஃபண்டுகள் உள்ளன.

-தி இந்து (த)



## ஆன்லைன் போட்டி...

# சிறு கடைகளை காப்பற்ற வருகிறது புது திட்டம்

- Tamil Goods Return

சிறிய கடைகளுக்கு தேசிய சில்லறை விற்பனையக கட்டமைப்பை மத்திய அரசு தயாரித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆன்லைன் வணிக போட்டியை சிறப்பாக சமாளிக்க இந்த திட்டத்தால் முடியும் என்று அரசு நம்புகிறது.

இந்த திட்டத்தின் கீழ், ஒரு முறை பதிவு கட்டணம், மூலதனத்திற்கான சிறு கடன்கள் மற்றும் மின்னணு பேமெண்ட் ஏற்றுக்கொள்வதற்கான வசதி ஆகியவை வழங்கப்படும்.

மாநிலங்கள் பின்பற்றக்கூடிய ஒரு தேசிய பிரேம் ஒர்க் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்று ஒரு அதிகாரி உறுதி செய்துள்ளார். சில்லறை வணிகம் என்பது மாநிலப் பட்டியலில் வரக்கூடிய துறை. மாநிலங்கள் ஒவ்வொன்றும் இந்தத்துறை தொடர்பாக மாறுபட்ட கொள்கைகளைப் பின்பற்றுகின்றன.

இந்தியாவின் 2.7 டிரில்லியன் டாலர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% உள்நாட்டு வர்த்தகத்திலிருந்து கிடைக்கிறது. நாடு முழுவதும் 60 மில்லியனுக்கும் அதிகமான வணிக நிறுவனங்கள் இதற்கு பங்களிக்கிறது. இவை அனைத்துமே ஆன்லைன் வியாபாரத்தால் சவாலை எதிர்கொண்டுள்ளன.

உள்நாட்டு வர்த்தகம் சுமார் 25 கோடி மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறது. ஆண்டுதோறும் 15% வளர்ச்சியுடன் உள்ள துறை இது. எனவே, இதை காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது.

பெரும்பாலான மாநிலங்களில் கடைகள் மற்றும் நிறுவனங்களுக்கான பதிவு சட்டங்கள் உள்ளன. அதன் கீழ் அத்தகைய கடைகள் பதிவு செய்யப்படுகின்றன. பதிவுக் கொள்கை, கட்டணம் மற்றும் பிற விஷயங்கள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றன. சில நிறுவனங்களில் ஆண்டுதோறும் அல்லது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பதிவு செய்வது கட்டாயமாக உள்ளது.

இப்போது முன்மொழியப்பட்டுள்ள இந்த திட்டத்தின்படி, செலவினங்களைக் குறைப்பதற்காக எளிமைப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. ஆன்லைனில் ஒரே ஒருமுறை பதிவு செய்தால் போதும், அதன்பிறகு பதிவு செய்ய தேவையில்லை என்பது இந்த புது திட்டத்தின் முக்கியம்சங்களில் ஒன்றாகும்.

இதுபற்றி மத்திய அரசு அதிகாரி ஒருவர் கூறுகையில், சிறிய கடை உரிமையாளர்கள் படும் கஷ்டங்களை நாங்கள் பரிசீலனை செய்து வருகிறோம். அதை சரி செய்ய முயற்சிக்கிறோம் என்றார். சிறு கடன்கள் வழங்குவது மற்றும் டிஜிட்டல் முறையில் பணம் செலுத்தும் முறைக்கு இவர்களை கொண்டுவருவது குறித்து பரிசீலித்து வருகிறோம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இப்போதைய சூழ்நிலையில், 70 மில்லியன், சிறிய வணிக நிறுவனங்களில், 65 சதவீத கடைகள் டிஜிட்டல் வசதியில் இணைந்துள்ளன. கடைகள் அனைத்தின் விவரங்களையும். மாநில அரசு, தேசிய சில்லரை வணிக பிரேம் ஒர்க்கிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது இதன் முக்கிய நிபந்தனையாகும்.

## நெசவாளர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள்

- முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 60 வயது பூர்த்தியடைந்த நெசவாளர்களுக்கு பயனாளிகளுக்கு பிரதி மாதம் தலா ரூ. 1000 ஓய்வூதியமாக பெற்று வழங்கப்பட்டு வருகிறது.
- மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் 60 வயதுக்கு முன்னதாக உறுப்பினர் இறப்பு ஏற்படின் வாரிசுதாரருக்கு ரூ. 60 ஆயிரம் பெற்று வழங்கப்பட்டு வருகிறது.
- பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டத்தின் கீழ் 50 வயதுக்கு முன்னதாக உறுப்பினர் இறப்பு ஏற்படின் வாரிசுதாரருக்கு ரூ. 2 லட்சம் பெற்று வழங்கப்பட்டு வருகிறது.
- முத்ரா நெசவாளர் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர் உறுப்பினர்களுக்கு ரூ. 50 ஆயிரம் வங்கி கடன் வழங்கப்பட்டு வருகிறது.
- அனைத்து கைத்தறி நெசவாளர்களின் வீடுகளுக்கு 200 யூனிட். விசைத்தறி நெசவாளர்களின் வீடுகளுக்கு 750 யூனிட்டும் விலையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

- தினமணி




Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder • Voice Records • Access Control System • Fire Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z CCTV SYSTEMS

CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

# வியாபாரிகள், பெரும் வணிகர்களை காக்கும் காப்பீடுகள்!

சிறு கடைகள் நடத்தும் வியாபாரிகள் முதல், பெரிய தொழில் நிறுவனங்கள், ஆலைகள் போன்றவற்றை நடத்துபவர்கள் வரை, ஏதேனும் இடர் ஏற்பட்டால் அதிலிருந்து தங்களை காப்பாற்றிக்கொள்ள காப்பீடு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பொதுவாக கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள், ஆலைகள் நடத்துபவர்கள் வங்கிகளில் கடன் வாங்கியிருந்தால் மட்டும் வங்கிகள் மூலமாக காப்பீடு செய்து கொள்வது வழக்கம். மற்றபடி தாங்களாக முன்வந்து கடைகள், தொழில் நிறுவனங்கள், ஆலைகளுக்கு காப்பீடு செய்துகொள்வது கிடையாது. வியாபாரிகள், வணிகர்கள் தங்கள் நிறுவனங்களுக்கு ஏதேனும் இடர் ஏற்படும் பட்சத்தில் தங்களையும், நிறுவனத்தையும் காத்துக்கொள்ள தேவையான காப்பீடுகளை எடுத்துக்கொள்வது நலம்.

பொதுவாக காப்பீடுகளில் தீ காப்பீடு மிக முக்கியமானதாகும். தீ காப்பீடு என்பது கடைகள் மற்றும் ஆலைகள் தீப்பிடித்தால் மட்டுமே இழப்பீட்டை ஈடு செய்யும் என்பது கிடையாது. தீ காப்பீடு எடுத்தால், தீ, மின்னல், மின் கசிவு, வெளி வெடித்தல் (Explosion), உள் வெடித்தல் (Implosion), விமானம் மூலம் ஏற்படும் சேதம், கலவரம், புரட்சி, வன்செயல் போன்றவற்றால் ஏற்படும் இழப்பு, புயல், பெருங்காற்று, வெள்ளம், வெள்ளத்தில் மூழ்குதல் அல்லது அடித்துச் செல்லப்படுதல், மிருகங்களால் அல்லது வாகனங்களால் ஏற்படுத்தப்படும் சேதங்கள், பாறை அல்லது நிலச்சரிவு, தண்ணீர் தொட்டி மற்றும் அதன் குழாய் ஆகியவற்றில் ஏற்படும் வெடிப்பு ஆகியவற்றால் ஏற்படும் சேதம், ஏவுகணை சோதனைகளால் ஏற்படும் சேதங்கள், தானியங்கி சிதறல் மூலம் தெளிப்புகளில் ஏற்படும் கசிவு, புதர், காடு ஆகியவற்றால் ஏற்படும் தீ விபத்து உள்ளிட்ட அபாய கூறுகளும் இதில் அடங்கும். பூகம்பம், பயங்கரவாதிகள் தாக்குதல் போன்ற அசாதாரண நிகழ்வுகளுக்கு பிரீமியம் தொகை சற்று அதிகம் செலுத்த வேண்டியது இருக்கும்.

ஆபத்தான தொழில்கள் நிறைந்த வணிக வளாகங்கள், வெடிமருந்து விற்பனைக் கூடங்கள், பெட்ரோல் விற்பனை நிலையங்கள், மர அறுவைக் கூடங்கள், சுரங்கங்கள் போன்றவற்றுக்கு பிரீமியம் தொகை சற்று கூடுதலாக இருக்கும்.



இதர காப்பீடுகள்: கடைகளில் உள்ள பொருள்கள், நிறுவனத்தில் உள்ள உற்பத்திப் பொருள்கள், இயந்திரங்கள், மூலப்பொருள்கள் போன்றவை திருடு போய்விட்டால், அந்த இழப்பை ஈடு செய்ய காப்பீடு செய்ய முடியும். கடைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் கையிருப்பாக வைத்திருக்கும் பணம், வங்கியில் செலுத்துவதற்காக வாகனங்களில் கொண்டு செல்லும் பணம் போன்றவற்றுக்கும் காப்பீடு செய்ய முடியும்.

பணியாளர்களுக்கு பணியின் போது ஏதேனும் விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டால் அதை ஈடு செய்யும் வகையில் விபத்து காப்பீடு செய்ய முடியும். அவர்களுக்கு மருத்துவச் செலவு ஏற்பட்டால் அதை ஈடு செய்யும் வகையில் மருத்துவக் காப்பீடு செய்ய முடியும். பணியாளர்கள் எவரேனும் நிறுவனத்தில் பெரிய அளவில் மோசடி செய்தவிட்டால், அதனால் ஏற்படும் இழப்பை காப்பீட்டு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் பிடலிட்டி கேரண்டி என்ற காப்பீடு செய்ய முடியும்.

திருமண மண்டபங்கள், திரையரங்குகள், மருத்துவமனைகள் போன்ற அதிக மக்கள் கூடும் இடங்களில் பொதுமக்களுக்கு ஏதேனும் இடர் ஏற்பட்டால், அவர்களுக்கு இழப்பீடு கிடைக்க வழி செய்யும் வகையில் பப்ளிக் லயபிலிட்டி என்னும் காப்பீடு செய்ய முடியும். தங்கள் கடைகள், நிறுவனங்களுக்கு வெளியே உள்ள விளம்பர போர்டுகள், கண்ணாடி பொருள்கள் போன்றவற்றுக்கும் காப்பீடு செய்ய முடியும். இது போன்ற எண்ணற்ற காப்பீட்டு திட்டங்கள் உள்ளன.

எனவே, வியாபாரிகள், பெரிய வணிகர்கள் தங்களையும், தங்கள் நிறுவனங்களையும் காத்துக்கொள்ள, தங்களுக்கு தேவையான காப்பீடகளை, அரசு பொதுக்காப்பீட்டு நிறுவனங்களிலோ, தனியார் பொதுக்காப்பீட்டு நிறுவனங்களிலோ எடுத்து பயன்பெறலாம்.

– தினமணி





PG INDIA

"Quality" is the Best business plan

PG India

Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in



P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI

# குழந்தைகளுக்கும் சேமிக்க கற்றுத் தாருங்கள்!

– தி இந்து (த)

பெரும்பாலான பெற்றோர்களின் கவலையே தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பற்றித்தான். அவர்களுக்கு நல்ல கல்வியை அளிப்பது, நல்ல பழக்க வழக்கங்களை கற்றுத்தருவதோடு அதை அவர்கள் பின்பற்ற வேண்டும் என குழந்தைகள் பற்றிய கவலை பட்டியல் நீண்டுகொண்டே தான் செல்கிறது. இவை அனைத்துக்கும் மேலாக குழந்தைகள் பணத்தை சிறப்பாக கையாள்வார்களா? என்ற கவலை பெரும்பாலான பெற்றோர்களை வாட்டி வதைக்கிறது. ஆனால், குழந்தைகளுக்கு நிதியைக் கையாள கற்றுத் தருவது என்பது ராக்கெட் தொழில் நுட்பம் போன்று மிகவும் கடினமான விஷயம் அல்ல.

சிறு வயதிலிருந்தே பணத்தைப் பற்றியும் அதை கையாளும் விதம் பற்றியும் சிறுகச் சிறுக கற்றுத் தருவதன் மூலம் வளர்ந்து பெரியவர்களாகும் போது நிதியைக் கையாள்வார்களா? என்ற கவலை உருவாவதைத் தவிர்க்கலாம். அத்தகைய நிலையை எட்டுவதற்குரிய சில வழிமுறைகளை இங்கே பார்க்கலாம்.

**கதை சொல்லுங்கள்:** குழந்தைகளுக்கு நிதி சார்ந்த விஷயங்களைக் கற்றுத் தருவதை அவர்களது 5 வயதிலிருந்தே தொடங்கிவிடுங்கள். சிறு குழந்தைகளுக்கு கதை கேட்பதில் மிகுந்த ஆர்வம் இருக்கும். எறும்பும் வெட்டுக்கிளியும், மூன்று பன்றி கட்டிகளும் தாகத்தில் தவித்த காகம் உள்ளிட்ட கதைகளை குழந்தைகளுக்குக் கூறுங்கள். இந்தக் கதைகளின் நீதியை அவர்களுக்கு தெளிவாக விவரியுங்கள். குறிப்பாக எறும்பும் வெட்டுக்கிளியும் கதையில் நாளைய வெற்றிக்கு சிறிதளவு சேமிப்பு அவசியம் என்பதை புரிய வையுங்கள். அதாவது நாளைய தேவைக்கு இன்றே வேலை செய்ய வேண்டும் என்பதை தெளிவுபடுத்துங்கள். நீண்ட காலம் குறித்து திட்டமிடாதவர்கள் தங்கள் வாழ்க்கையில் எவ்விதம் தோல்வியைத் தழுவினர் என்பதை புரிய வையுங்கள்.

கதை சொல்வதில் இப்போதைய தலை முறையினருக்கு தடுமாற்றம் இருக்கலாம் அல்லது குழந்தைகளுக்கு நிதி தேவையை உணர்த்தும் கதைகளுக்கு எங்கே செல்வது என்ற தயக்கமும் இருக்கலாம். இதைப்போக்கும் வகையில் ரிசர்வ் வங்கி நிதிக்கல்வி என்ற முயற்சியில் பல்வேறு வயதுப் பிரிவினருக்குமான கதைகளை அதாவது பள்ளிக்கு செல்லும் சிறுவர், சிறுமிகளுக்கேற்ற கதைகளை உருவாக்கியுள்ளது. இத்தகைய கதைகள் ரிசர்வ் வங்கியின் இணையப்பக்கத்தில் உள்ளன.

அதில் ராஜுவும் பணம் காய்ச்சி மரமும், மணி குமாரும் நிதிக் கொள்கையும், ராஜுவும் நிலவு ஏணியும், ராஜுவும் மந்திர ஆடும், மணி குமார் உங்கள் நிதி பாதுகாவலன், ராஜுவும் நண்பன் ஏ.டி.எம்-மும், ராஜுவும் கடன் அட்டையும் என்ற தலைப்பில் கதைகளை வெளியிட்டுள்ளது. கதைகள் அனைத்தும் நிதி மேலாண்மையின் தத்துவத்தை இளம் தலைமுறையினர் புரிந்துகொள்ளும் வகையில் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளது.

**உண்டியல்:** குழந்தைகளுக்கு சேமிக்கும் பழக்கத்தை முதலில் கற்றுத் தர உதவுவது உண்டியல் முறைதான். வங்கிகளே இப்போது பன்றிக் குட்டி உண்டியலை அளிக்கின்றன. இந்த உண்டியலில் பெற்றோர்கள் முதலில் ஒரு குறிப்பிட்ட காசைப் போட்டு சேமிக்கும் பழக்கத்தை குழந்தைகளுக்கு கற்றுத் தரலாம். நண்பர்கள், உறவினர்கள் தரும் தொகையை இதில் சேமிக்கும்படி அறிவுறுத்தலாம். குழந்தைகளை ஷாப்பிங் அழைத்துச் செல்லும்போது, அவர்கள் சேமித்த தொகையை எடுத்துக் கொண்டு அவர்களுக்கு விருப்பமானதை வாங்கித் தரலாம். ஒருவேளை அவர்கள் ஆசைப்படும் பொருளின் விலையை விட அவர்களது சேமிப்பு குறைவாக இருந்தால், அந்தப் பொருளின் விலை அளவுக்கு சேமித்த பிறகு வாங்கலாம் என குழந்தைகளக்கு சொல்லித் தரலாம். அப்போது தான் பணத்தை சேமிக்க வேண்டும் என்பதில் உறுதித் தன்மை குழந்தைகளிடம் உருவாகும்.

குழந்தைகள் தாங்கள் விரும்பிய பொருளை தங்களது சேமிப்பிலிருந்து வாங்குவதற்கு பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும். தங்கள் சேமிப்பிலிருந்து அவர்கள் உபயோகமற்ற பொருளை வாங்கினாலும் அதை அனுமதியுங்கள். அந்தப் பொருளை வாங்கிய பிறகு அதற்கு ஏன் ஆசைப்பட்டோம் என குழந்தையே உணரும்போது அடுத்ததாக அத்தகைய பொருளின் மீது நாட்டம் குறையும். இதன் மூலம் அநாவசிய செலவுகளைத் தவிர்ப்பதை குழந்தைகள் கற்றுக்கொள்கின்றனர்.

**செயலி மூலம் பயிற்சி:** குழந்தைகளிடம் சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க ஆன்லைனில் இப்போது ஏராளமான செயலிகள் வந்துள்ளன. மை பிக்கி பேங்க் சேவிங்ஸ் டிராக்கர் (My Piggy Bank Savings Tracker) எனும் செயலியானது இதில் ஒன்று. குழந்தைகள் தங்கள் நிதி இலக்கை எந்த அளவுக்கு எட்டியுள்ளனர் என்பதை இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.


Sowndarya Traders

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

உதாரணத்திற்கு குழந்தையின் இலக்கு அதாவது விரும்பும் பொருள், அதற்கு தேவைப்படும் நிதி, தற்போது எவ்வளவு தொகை சேமிக்கப்படுகிறது என்ற அடிப்படையில் குறிப்பிட்ட இலக்கை எப்போது எட்ட முடியும் என்பதை இந்த செயலி உணர்த்தும். குழந்தையின் சேமிப்பு அளவு அது எந்த அளவுக்கு முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது என்பதோடு குறிப்பிட்ட நாள் வருவதற்கு முன்பு அலெர்ட்களும் இந்த செயலியிலிருந்து வரும். குழந்தைகளை ஈர்க்கும் வகையில் பட விளக்கங்களும் இந்த செயலியில் இருப்பது கூடுதல் சிறப்பாகும்.

**குழந்தைகள் சேமிப்புக் கணக்கு:** இப்போது பெரும்பாலான வங்கிகளில் குழந்தைகளுக்கும் சேமிப்புக் கணக்கு தொடங்கி செயல்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது. அந்த வகையில் உங்கள் குழந்தைகள் வங்கிக் கணக்கு தொடங்குவதற்கு நீங்கள் உதவுங்கள். அதன் மூலம் அவர்கள் நிதியை எவ்விதம் கையாள்கின்றனர் என்பதை கவனியுங்கள்.

உதாரணத்திற்கு ஹெச்.டி.எப்.சி வங்கியில் குழந்தைகள் சேமிப்புக் கணக்குக்கு சில சலுகைகள் தரப்படுகின்றன. குறிப்பாக டெபிட் கார்டு, கல்வி காப்பீடு, மணி மேக்ஸிமைஸர் மற்றும் இலவச இணையதள வங்கி சேவை உள்ளிட்டவற்றை அளிக்கிறது. இதில், ஒரு லட்சம் ரூபாய் வரையிலான தொகை கல்வி காப்பீடாக அளிக்கப்படுகிறது. இந்த தொகையானது பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ திடீரென உயிரிழந்தால் குழந்தைகளுக்குக் கிடைக்கும். மணி மேக்ஸிமைஸர் திட்டத்தில் குழந்தையின் சேமிப்புக் கணக்கில் உள்ள தொகை ரூ. 35000/- க்கும் அதிகமானால் அதில் ரூ. 25000/- க்கு மேல் உள்ள தொகை நிரந்தர வைப்புக் கணக்கில் ஓராண்டுக்கு வைக்கப்படும். இதே போல கனரா வங்கியின் ஜூனியர் சேமிப்புக் கணக்கில் 10 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

10 வயதுக்கு மேற்பட்ட பள்ளி சிறுவர், சிறுமியர்களிடம் சேமிக்கும் வழக்கத்தை ஊக்குவிப்பதற்காக தபால் துறையால் தொடங்கப்பட்டது தான் சஞ்சாயிகா சிறு சேமிப்புத் திட்டமாகும். கிராமப்பகுதிகளில் உள்ள பள்ளிகளில் சஞ்சாயிகா சிறு சேமிப்புத் திட்டம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. ஆசிரியர்கள் மாணவ, மாணவியருக்கு சேமிப்பதால் ஏற்படும் நன்மைகளை வலியுறுத்தியுள்ளனர். குழந்தைகள் சேமிக்கும் தொகையை பெற்றோர்கள் எடுத்து செலவழிக்கக் கூடாது. அது அவர்களுக்கு ஏமாற்றத்தை உண்டாக்கும். தாங்கள் சேமிக்கும் தொகையை தாங்களே செலவழிக்கலாம் என்ற எண்ணம் வலுப்பெறும்போது தான் சேமிக்கும் வழக்கமும் வேரூன்றும்.

# ஓய்வூதிய திட்டம்

ஓய்வூதியம் அனைவருக்கும் தேவையா? அதன் முக்கியத்துவத்தை பற்றி ஓர் அலசல்.

இன்றைய அவசர யுகத்தில், மாறுபட்ட வாழ்க்கை முறையில் நம்மில் பல பேர் அன்றாடதேவைகளை பூர்த்தி செய்து மேம்பட்ட வாழ்க்கையை வாழ்வதற்கு பெரும் பாடுபட வேண்டியுள்ளது. இந்நிலையில் முதிர்ந்த காலத்திற்குண்டான சேமிப்பு (ஓய்வூதியம்) பற்றி திட்டமிட முடிகிறதா? என்றால் இல்லை என்பதே பெரும்பால மக்களின் மனநிலையாக இருக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் கடன் இல்லாத வாழ்க்கை என்பதே நினைத்துப்பார்க்க முடியாத நிலையில் உள்ளது. ஏதாவதொரு கடனை மாதாமாதம் கூட்டிக்கொண்டு தான் இருக்கின்றோம். வீட்டுக்கடன், கல்விக்கடன் மற்றும் பிற தேவைகளுக்கும் EMI கட்டிக் கொண்டு இருக்கின்றோம்.

இன்றைய சூழ்நிலையில், ஓய்வு வயது 58-60 என்ற வரம்பு குறைந்து 45 என்ற அளவில் மாறி உள்ளது. குறிப்பாக கம்ப்யூட்டர் துறையில். அதே நேரத்தில், நாம் வாழும் சராசரி வயது சுமார் 70 ஆண்டுகளாக மாறி உள்ளது.

இந்த கண்ணோட்டத்தில் பார்தோமேயானால் சுமார் 25 ஆண்டுகள் ஓர் நல்ல நிலையில் (45 வயது முதல் 70 ஆண்டு வரை) வாழ வேண்டும் என்றால் கண்டிப்பாக ஓர் நிலையான வருமானம் வரும்படி நாம் நம் வாழ்க்கையை வகுத்துக்கொள்ள வேண்டி உள்ளது.

அதற்கு நாம் அனைவரும் ஓய்வூதிய திட்டத்தை தேர்வு செய்து சேமித்து வைப்பதே சாலச் சிறந்ததாகும். தற்பொழுது நிதி சம்பந்தமான ஓய்வூதிய திட்டங்கள் பல கிடைக்கின்றன. தங்களின் தேவைக்கேற்ப, தகுந்த திட்டங்களில் சேமித்து முதுமை காலத்தில் ஓர் மேம்பட்ட வாழ்க்கையை எல்லோரும் வாழ வேண்டும் என்பதே இந்த கட்டுரையின் நோக்கம்.

தகுந்த ஆலோசகர்களின் துணை கொண்டு எதிர்காலம் சிறப்பாகவும், அனைத்து வசதிகளுடனும் நீடுடி வாழ வாழ்த்துகிறோம்.

– எஸ்.எஸ். ராம்சுந்தர்
நிதி ஆலோசகர்



சிறந்த தையல் !
குறைந்த விலையில் !
நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!
ரேவதீஸ் டெக்ஸ்
பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்
1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

# Taxpayers should keep the following things in mind

**1. E-invoice:**

New E-invoicing system is going to be implemented in GST which is mandatory from 1st April 2020 for taxpayers having an annual turnover exceeding Rs. 100 crore and then gradually to all B2B suppliers in future. A mechanism for the continuous upload of revenue invoices on a real-time basis.This is most remarkable change coming in Indian Book Keeping.

**2. New IRP in GST:**

Invoice Registration Portal would be introduced this new year. IRP shall make an e-invoice of the invoices uploaded by the supplier. IRP shall send the e-invoice to the supplier and recipient. IRP shall send e-invoices data to GSTN portal

**3. New Return:**

New simplified auto-mated GST returns would be implemented from 1st April 2020 for all taxpayers. This new returns system will increase compliance and reduce tax evasion to a larger extent.

**4. Annexure 1 -and Annexure 2:**

Anx-1 of Outward Supplies and Anx-2 of Inward Supplies will be the future base for filing of all GST Returns, thus these 2 reports will be the key for future reports of GST which will replace GSTR 1 and GSTR-2A.

**5. Restriction on claim of ITC:**

With effect from 01/01/2020, ITC in respect of invoices or debit notes that are not reflected in taxpayer's FORM GSTR-2A shall be restricted to 10 per cent of the eligible ITC reflected in his FORM GSTR-2A. Earlier the restriction was 20%. A major change in ITC availlment.

**6. E-way Bill and GSTR-1:**

From 11th January, 2020 non-filing of GSTR-1 for two consecutive periods would block generation of E-way Bill. Thus, regular filing of GSTR-1 and GSTR-3B in year 2020 should go hand in hand.

**7. Waiver of late fees for Non-filing of GSTR-1:**

If the taxpayer has failed to file GSTR-1 from July 2017 to November 2019, then the taxpayers can file such returns till 10 January, 2020 and the late fees for the same has been waived of. This will also affect GSTR-2A of the recipient to claim ITC.

**8. GST Audit and Annual Return:**

The due date for filing GST Annual Return and Audit Report for F.Y. 2017-18 has been further extended to 31st January, 2020.The due date for filing GST Annual Return and Audit Report for F.Y 2018-19 has been extended to 31st March, 2020. For F.Y 2019-20 new format may be brought in because of inherent limitations in current forms.

**9. DIN notices and E-scrutiny:**

Due to decline in collection of revenue from GST, large scale e-scrutiny and e-assessment notices with DIN for the returns from July 2017 may be taken up. It would be done in order to check significant deviations in returns.

**10. GSTN Network is proposed to be re-engineered for more taxpayer-centric services** like reminder of return filing, status of refund, ITC matches and mismatches, etc.

- T.R. Saravanan

## மருத்துவத் தகவல்

54 வயதான எனக்கு முழங்கால் மூட்டு வலி ஆறு மாதங்களாக உள்ளது. மருத்துவரிடம் ஆலோசித்ததில் அவர் எனக்கு மூட்டு தேய்மானம் ஆரம்ப கட்டத்தில் இருப்பதாகவும். Phsiotheraphy செய்ய ஆலோசனை கூறினார். மேலும் மூட்டிற்கு உறை அணிய சொன்னார். மூட்டு உறை அணிந்த பின் என் கால் வீங்கி உள்ளது. எனக்கு பயமாக இருக்கிறது. இந்த கால் வீக்கத்தை எப்படி போக்குவது?

மூட்டு உறை என்பது மூட்டின் அசைவை கொடுக்கும் தசைகளுக்கும் ஒரு ஆதரவு அளிக்க உபயோகப்படுகிறது. மூட்டின் உறை மிக இறுக்கமாக இருந்தால் காலின் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு கால் மற்றும் பாதத்தில் வீக்கம் உண்டாகலாம். மூட்டின் உறையின் அளவு சரியாக உள்ளதா என்று சரி பார்த்து சரியான அளவை அணியவும். மேலும் நீங்கள் உறங்கும்போது காலை உயர்த்தி வைத்து உறங்கினால் கால்வீக்கம் நன்றாக குறையும்.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,
வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக்
93442 46436


பதிவு எண்: 16 / 2002 ☎ 0452-2679676

மகாத்மா முதியோர் இல்லம்

Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்

7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.

website : www.mahathmaoldagehome.com E-mail : mmilmalarkulu@gmail.com

நிறுவனர்கள்

| M.S. சந்திரசேகர் | J.R. ரமேஷ் | B.J. மகேசுவர்லால் | T.R. குமரன் | M.R. பிரேம்குமார் |
|---|---|---|---|---|
| 98421-44555 | 97861-40570 | 93444-51607 | 94437-23337 | 93444-51605 |

# Reserve Unique Name (RUN)

## Company Name Approval Process

The Ministry of Corporate Affairs has simplified the Company Name Approval Process from 26 January 2017 by introducing a new simple web-based application called RUN (Reserve Unique Name) for Company Registration. RUN (Reserve Unique Name) is a simple and easy process for reserving a name for a new company or for change of name of an existing Company.

This facility can be availed only by a registered user of MCA portal. The complete name of proposed name, including suffix like (OPC) Private Limited / Private Limited / Limited, should be submitted at the time of application for approval. Also, the object of the proposed Company is also to be submitted through RUN application. In case of change of name of an existing Company the Corporate Identification Number (CIN) of the existing company should be submitted at the time of application through RUN Process to reserve a new name.

The company name applied should comply with Company Name Availability Guidelines. The applicant should also ensure that the proposed name is not same / similar as per the Trademark Regulations.

Name applications under RUN will be processed by Central Registration Centre (CRC). The name approval is subject to comprehensive check by the Central Registration(CRC) and thereafter approval or rejection shall be communicated by e-mail to the applicant. The name approved under RUN Process for new Company registration is valid for a period of 20 days from the date of approval. In case of change of name of an existing company, the name shall be valid for 60 days from the date of approval.

**Company Name Application process through Reserving Unique Names (RUN):**

The ministry of Corporate Affairs has eased the Company Name Application process through Reserving Unique Names (RUN). From 24th March 2018, under RUN process, the applicant can submit TWO proposed names for approval in the order of preference. In case the applied names are not available for registration, the ministry will give ONE chance to resubmit the application with another set of TWO names for approval.

RUN Company Name Application Fee is Rs.1000.00. This fee is additional to the regular fee to be paid through SPICE Application for Company Registration. RUN Company Name Application is not a mandatory process. Alternatively, the applicant can apply Company Name through the integrated SPICE Application for Company Registration. In that case, we can submit ONLY ONE name for seeing approval. However, there are TWO changes of resubmissions for SPICE Application. So, effectively the applicant can submit THREE NAMES (1-Original Submission + 2 Re-submissions) for approval without any extra cost.

**Application Fee:**

The Fee for Company Name application under RUN is Rs.1000.

**Two Chances - 2 Names Each:**

In a RUN Application, the applicant can submit 2 alternate names in the order of preference. In case the name application is rejected by the CRC, there is one chance for re-submission of application with another set of 2 names. If an application is rejected second time, a fresh application is required to be □led with fresh payment of Rs.1000 for every application submitted using the RUN service.

It is very important to note that, the Company incorporation documents (SPICe, INC-12 and INC-24) for a Company Name approved under RUN Process can be submitted only by the same user login ID which was used for reserving the name.

**FAQ On Reserve Unique Name(RUN):**

**1. What is Reserve Unique Name (RUN) web service:**

RUN (Reserve Unique Name) is a simple and easy process for reserving a name for a new company or for change of name of an existing Company. The Ministry of Corporate Affairs has simplified the Company Name Approval Process from 26 January 2017 by introducing a new simple web-based application called RUN (Reserve Unique Name) for Company Registration.

**2. Who can make an application under RUN?** Only a registered user of MCA portal can make an application under RUN? After login, select Reserve Unique Name(RUN) under the head 'MCA Services'. th A person who wish to register a new Company as well as an existing Company wish to change its name can use RUN for Company Name reservation

**3. What all names can be reserved under RUN?**

Name of all types of Companies can be reserved through RUN. Following are the requirements for different types of Companies.

| Type of Company | Suffix Required |
|---|---|
| New Limited / Private Limited Company / Part I company | Limited / Private Limited |
| Private (OPC) | (OPC) Private Limited |
| Section 8 company | No need to add words Limited / Private Limited |



| | |
|---|---|
| Producer Company | Producer company limited |
| Unlimited Company | Unlimited |
| IFSC Company | (IFSC) Limited / (IFSC) Private Limited/ IFSC Limited / IFSC Private Limited |
| Nidhi Company | Nidhi Limited |

**4. When is CIN is required under RUN?**

Corporate Identification Number (CIN) is required in RUN process only when an existing company wishes to change its name and is using RUN to reserve a new name.

**5. What are the requirements for "Proposed Name"?**

When we make an application to reserve name for incorporation of a new company or for changing the name of an existing company, we must ensure that the proposed name selected does not contain any word which is prohibited under the Company Name Availability Guidelines. Also, we have to a Trademark Search to check if the proposed name is registered as a Trademark in any of the 45 Classes of Trademark and the proposed name is not in violation of provisions of Section 4(2) of the Companies Act, 2013, failing which it is liable to be rejected.

**6. What is the validity of Company name approved under RUN?**

A Company name approved under RUN is valid for a period of

**A**. 20 days from the date of approval (in case name is being reserved for a new company) or

**B**. 60 days from the date of approval (in case of change of name of an existing company)

**7. Do we have to submit the Objects of the Company?**

The objects of the Proposed company are required to be submitted along with relevant submissions as comments in support of the proposed name.

**8. How many names can be submitted under RUN Application?**

Only ONE name can be submitted under RUN Application. There is no option to submit multiple names in the order of preference.

**9. Is it mandatory to attach documents while reserving name?**

There is no mandatory requirement to attach any document while submitting a RUN Application. However, it is advisable to submit NOC from an existing Company or approval from otjer agencies and any other relevant submissions to support the name application while submitting RUN Application. All the submissions are required to be filed as single document as an attachment and the size of the file should not exceed 6MB.

**10. What is the Fee payable for RUN application?**

Rs.1000 for each submission. Upon submission of the proposed name and the payment, challan will be generated with Service Request Number (SRN) with details of the fees paid by the user.

**11. How many chances of Re-submission available in one RUN Application?**

There is only ONE Chance and there is no change for Re-submissions. The name applied for will either be approved or rejected, and no resubmission is allowed. A fresh payment of Rs.1000 has to be made for every application submitted using the RUN service.

**12. Can we get the refund of Fee if the name is rejected?**

No. there is no refund of Fee from MCA for rejected RUN applications.

**13. How names are processed under RUN?**

Name applications will be processed by Central Registration Centre(CRC). The name applied for will be subjected to a comprehensive check by the Central Registration(CRC) and thereafter approval or rejection shall be communicated by e-mail to the applicant.

**14. What precautions are required to be taken to avoid rejection of names applied for?**

To avoid rejection of the name applied for, the applicant is required to be familiar with the Companies (Incorporation) Rules 2014, as amended, and conduct their own Name and Trade Mark search. However, the names that the applicant thinks to be available may not be approved by the Central Registration Centre(CRC) as the CRC does a comprehensive check on Company names phonetically similar and same / similar meaning in other languages etc.

**15. How the Registrar will communicate the approval/rejection of the names?**

When a proposed name is approved/ rejected, an email communication containing confirmation of approval/rejection (as the case may be) with related documents, if any, is sent to the email id of the applicant. Name approval/ rejection letter upon approval/ rejection of the eForm is system generated and shall be digitally signed by the Registrar and sent to the email id of the applicant.

**16. Who can file the Incorporation Documents for a Company name approved under RUN?**

The Incorporation Documents for a Company name approved under RUN can be filed ONLY from the user ID where which was used for reserving the name.

**17. Is RUN (Reserve Unique Name) available for reservation of LLP Name?**

Yes. RUN (Reserve Unique Name) is available for reserving the registration of LLP also.

- companiesinn


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award

ROYAL ROMANTIC

No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்டிரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

"ஷர்வ ரக்சன்" MRS

BEST NUMEROLOGIST

FOR APPOINTMENT
98421 11411





Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.

Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.

Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

## JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj®

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY



## மீரா குஞ்ச் பாலிமரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



LAABH SAMACHAR

MULTI COLOR ADVT.

Contact: 93441 97952





LAABH SAMACHAR

MULTI COLOR ADVT.

Contact: 93441 97952



RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.01.2020 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

An ISO 9001:2015 Certified Company

THE CONSTRUCTIVE COMPANY
www.tcco.co.in

Design & Construction of Industrial Buildings, Mixed Use Buildings, Residential Apartments, Academic Institutions, Aircraft Hangars, Uber Luxury Villas, Special Structures.

Land Line: 0452-25 81 450
Email: info@tcco.co.in

Some of our Completed Projects






HEAD OFFICE :
No 264, LIG Colony, Opp. SUNDARAM PARK,
OFF LAKE VIEW ROAD, KK NAGAR , MADURAI - 625 020

# VALE SPECIALTY ORTHO CLINIC
## வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.

Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்



**Dr. K.N. SUBRAMANIAN** MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

# கைத்தறியில் ஓர் புதுமை
## Electronic Jacquard



**Technical Details :**

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm



**Applications :**

- Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
- Blankets • Made Ups • Shirting



N.S. Rajan

# SRE CORPORATION

359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60563, 98422 33645, 98430 46064, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan